भारत का राजपत्र

# The Gazette of India

இந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

**சிறப்பிதழ்**

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

*பகுதி XV பிரிவு 1*

प्राधिकार प्राकारित

**PUBLISHED BY AUTHORITY**

**அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது**

नई दिल्ली, सोमवार, 6 मार्च, 2000/1922 सका

New Delhi, Monday, 6th March 2000/1922 Saka

*புது தில்லி, திங்கட்கிழமை, 6 மார்ச் 2000/1922 சக*

**Ministry of Law, Justice and Company Affairs**
**(Legislative Department)**
**New Delhi**

**சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்**
**(சட்டமியற்றுத் துறை),**
**புது தில்லி**

The Translation in Tamil of the Transfer of Property Act, 1882 (4 of 1882). The Dissolution of Muslim Marriage Act, 1939 (8 of 1939) The Foreign Contribution (Regulation) Act, 1976 (49 of 1976), The Companies (Donations to National Funds) Act, 1951 (54 of 1951), The Negotiable Instruments Act, 1881 (26 of 1881), The Company Secretaries Act, 1980 (56 of 1980), are hereby published under the Authoritative Texts thereof in Tamil under clause (a) of Section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

சொத்து உரிமை மாற்றச் சட்டம், 1882 (4/1882), முஸ்லீம் மண உறவு தீர்த்தல் சட்டம், 1939 (8/1939), அயல்நாட்டு நன்கொடை (ஒழுங்குமுறைப் படுத்துதல்) சட்டம், 1976 (49/1976), நிறுமங்கள் (தேசிய நிதியங்களுக்கு நன்கொடைகள் கொடுத்தல்) சட்டம், 1951 (54/1951), மாற்று முறையாவணங்கள் சட்டம், 1881 (26/1881), நிறுமச் செயலாளர்கள் சட்டம், 1980 (56/1980) ஆகியவற்றின் தமிழ்மொழி பெயர்ப்பு குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின்படி இதன்மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973) இன் பிரிவு 2 இன் கூறு 'அ' வின் படி இவையே தமிழில் அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் எனக் கொள்ளப்படுதல் வேண்டும்.

[Price: Rs.111.00]

# மாற்று முறையாவணங்கள் சட்டம், 1881

## (சட்ட எண் 26/1881)

*[1881, டிசம்பர் 9]*

கடனுறுதிச் சீட்டுகள், மாற்றுச்சீட்டுகள், காசோலைகள் ஆகியவை தொடர்பான சட்டத்தைப் பொருள்வரையறை செய்வதற்கும், திருத்தம் செய்வதற்குமான ஒரு சட்டம்.

முகப்புரை.

கடனுறுதிச் சீட்டுகள், மாற்றுச்சீட்டுகள், காசோலைகள் ஆகியவை தொடர்பான சட்டத்தைப் பொருள் வரையறை செய்வதும், திருத்தம் செய்வதும் உகந்ததாக இருப்பதால்.

ஈங்கிதனால் பின்வருமாறு சட்டமியற்றப்படுகிறது:—

### அத்தியாயம் I

### முன்னுரை

குறுந்தலைப்பு.

*1.* இந்தச் சட்டம், மாற்று முறையாவணங்கள் சட்டம், 1881 என்று வழங்கப்பெறும்.

வட்டார அளாவுகை உண்டிகள முதலியவை தொடர்பான வழக்காறு களுக்கான காப்புரை.

இது, இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும்; ஆனால், இதில் அடங்கியுள்ள எதுவும், இந்திய நாணயத்தாள் சட்டம், 1871 இன் பிரிவு 21ஐப் பாதிக்காது அல்லது கீழை நாட்டு மொழியிலிருக்கிற முறையாவணம் எதுவும் தொடர்பான வட்டார வழக்காறு எதனையும் பாதிக்காது:

***வரம்புரையாக:*** முறையாவணத்திற்குரிய தரப்பினர்களிடையேயுள்ள சட்டப்படியான தொடர்புகள் இந்தச் சட்டத்தினால் ஆளப்படுதல் வேண்டும் என்ற ஓர் உட்கருத்தை அந்த முறையாவணத்தில் அடங்கியுள்ள எவை சுட்டிக்காட்டுகின்றனவோ அந்தச் சொற்கள் எவற்றினாலும் முறையாவணத்தின் மையப் பகுதியிலிருந்து அத்தகைய வழக்காறுகள் விலக்கப்படலாம்; மற்றும், 1882 மார்ச்சு முதல் நாளன்று இது செல்லாற்றல் பெறும்.

தொடக்கம்.

*2.* [செய்சட்டத்தின் நீக்கறவு] திருத்தம் செய்தல் சட்டம், 1891 (XII/1891)ஆல் நீக்கறவு செய்யப்பட்டது.

பொருள் கோளுக்கான வகையம்.

*3.* இந்தச் சட்டத்தில்,—

"வங்கியர்"

"வங்கியர்" என்பது ஒரு வங்கியராகச் செயற்படும் நபர் எவரையும், அஞ்சலகச் சேமிப்பு வங்கி எதனையும் உள்ளடக்கும்.

"சான்றுறுதி அதிகாரி."

சான்றுறுதிகள் சட்டம், 1952 (LII/1952) இன் பிரிவு 16ஆல் விட்டுவிடப்பட்டது.

### அத்தியாயம் II

### கடனுறுதிச் சீட்டுகள், மாற்றுச் சீட்டுகள், மற்றும் காசோலைகள் பற்றியது

"கடனுறுதிச் சீட்டுகள்."

*4.* "கடனுறுதிச் சீட்டு" என்பது ஒரு குறிப்பிட்ட பணத்தொகையை, ஒரு குறிப்பிட்ட நபருக்கு அல்லது அவரது ஆணையின்படி, அல்லது முறையாவணத்தைக் கொணர்பவருக்குச் செலுத்துவதற்காக வரைக்கட்டற்ற ஏற்புறுதியைக்கொண்டிருப்பதும் எழுதுநரால் கையொப்பமிடப்பட்டதுமான (ஒரு வங்கித்தாள் அல்லது நாணயத்தாளாய் இராத) எழுத்து வடிவிலான ஒரு முறையாவணமாகும்.

### எடுத்துக்காட்டுகள்

பின்வரும் சொற்றொடர்களிலுள்ள முறையாவணங்களில் 'அ' என்பவர் கையொப்பமிடுகிறார்;

(அ) "நான் ஆ என்பவருக்கு அல்லது அவரது ஆணையின்படி 500 ரூபாய் செலுத்துவதாக உறுதியுரைக்கிறேன்."

(ஆ) "பெற்றுக்கொண்ட தன் பெறுமானத்திற்காக ஆ என்பவருக்குக் கோரும் போது 1,000 ரூபாயைச் செலுத்துவதாக நானே கடன்பட்டிருக்கிறேன் என்று நான் ஒப்புக்கொள்கிறேன்."

(இ) "திரு. ஆ அவர்களே, நான் தங்களுக்கு 1,000 ரூபாய் கடன்பட்டிருக்கிறேன்."

(ஈ) "நான் ஆ என்பவருக்கு 500 ரூபாயும் அவருக்குக் கொடுபட வேண்டிய பிற பணத்தொகைகள் அனைத்தையும் செலுத்துவதாக உறுதியுரைக்கிறேன்."

(உ) "நான் ஆ என்பவருக்கு 500 ரூபாயை, அவர் எனக்குக் கடன்பட்டிருக்கலாகும் பணம் எதையும் முதலில் அதிலிருந்து கழித்துக் கொண்டு, செலுத்துவதாக உறுதியுரைக்கிறேன்."

(ஊ) "நான் இ என்பவரை மணந்த ஏழு நாட்களுக்குப் பின்பு ஆ என்பவருக்கு 500 ரூபாய் செலுத்துவதாக உறுதியுரைக்கிறேன்."

(எ) "நான் ஆ என்பவருக்கு அடுத்த சனவரி முதல் நாளன்று 500 ரூபாய் செலுத்துவதாகவும், எனது கறுப்புக் குதிரையை ஒப்படைப்பதாகவும் உறுதியுரைக்கிறேன்."

முறையே (அ) மற்றும் (ஆ) என்று குறித்துக்காட்டப்பட்ட முறையாவணங்கள் கடனுறுதிச்சீட்டுகள் ஆகும். முறையே (இ), (ஈ) (உ) (ஊ) (எ) மற்றும் (ஏ) என்று குறித்துக்காட்டப்பட்ட முறையாவணங்கள் கடனுறுதிச் சீட்டுகள் ஆகா.

**5.** "மாற்றுச்சீட்டு" என்பது, ஒரு குறிப்பிட்ட பணத்தொகையை ஒரு குறிப்பிட்ட நபருக்கு அல்லது அவரது ஆணையின்படி அல்லது அந்த முறையாவணத்தைக் கொணர்பவருக்குச் செலுத்துவதற்காக ஒரு குறிப்பிட்ட நபரைப் பணிக்கிற ஒருவரைக் கட்டற்ற ஆணையைக் கொண்டிருப்பதும், எழுதுநரால் கையொப்பமிடப்பட்டதுமான எழுத்து வடிவிலான ஒரு முறையாவணமாகும். "மாற்றுச்சீட்டு"

அந்தத் தொகையை அல்லது அதன் தவணை எதனையும் செலுத்துவதற்கான காலமானது, ஒரு குறித்துரைக்கப்பட்ட நிகழ்ச்சியானது, மனித குலத்தின் வழக்கமான எதிர்ப்பார்ப்புக்கேற்ப நிகழ்வது உறுதியாயிருந்து அது நிகழும் காலம் உறுதியற்று இருந்தபோதிலும், அந்த நிகழ்ச்சி நிகழ்ந்த பின்பு, ஒரு குறிப்பிட்ட காலக்கழிவின் மேல் இருக்க வேண்டும் என வெளிப்படுத்தப்பட்டிருக்கிற காரணத்தால் பணம் செலுத்துவதற்கான ஓர் உறுதியுரை அல்லது ஆணையானது, இந்தப் பிரிவின் மற்றும் பிரிவு 4இன் பொருளின்படி "வரைக்கட்டுக்குட்பட்டது" ஆகாது.

செலுத்தத்தக்க பணத்தொகையானது, எதிர்கால வட்டியை அது உள்ளாக்குகிறபோதிலும் அல்லது சுட்டிக்காட்டப்பட்டுள்ள ஒரு பரிமாற்ற வீதத்தில் செலுத்த வேண்டியிருக்கிறபோதிலும், அல்லது நடப்பிலிருக்கிற பரிமாற்ற முறைக்கு ஏற்ப இருக்கிறபோதிலும், மற்றும் ஒரு தவணையை செலுத்தத் தவறியதன்மேல் செலுத்தப்படாதிருக்கும் மீதித்தொகை கொடுபட வேண்டியதாகிவிடும் என அந்த முறையாவணம் வகை செய்கிறபோதிலும், அந்தத் தொகையானது இந்தப் பிரிவின் மற்றும் பிரிவு 4இன் பொருளின்படி "குறிப்பிட்ட" தாக இருக்கலாம்;

எவருக்குப் பணிப்புரை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது அல்லது எவருக்குத் தொகை செலுத்தப்படவிருக்கிறது என்பது தெளிவாக இருக்கிறதோ அந்த நபரின் பெயர் தவறாகக் குறிக்கப்படுகிறபோதிலும், அல்லது விவரிப்பின் வாயிலாக மட்டுமே பெயர் குறிக்கப்படுகிற போதிலும், இந்தப் பிரிவின் மற்றும் பிரிவு 4இன் பொருளின்படி "குறிப்பிட்டநபர்" ஒருவராக இருக்கலாம்.

**6.** "காசோலை" என்பது, குறித்துரைக்கப்பட்ட வங்கியருக்கு வரையப்பட்டதும், கோரிக்கையின் மேல் அல்லாமல் பிறவாறாகச் செலுத்தத்தக்கது என வெளிப்படுத்தப்படாததுமான மாற்றுச்சீட்டு ஆகும். "காசோலை"

**7.** மாற்றுச்சீட்டு அல்லது காசோலையின் எழுதுநர் "வரைபவர்" என்று வழங்கப்பெறுவார்; அதன்படிச் செலுத்துவதற்குப் பணிக்கப்பெற்ற நபர் "பெயரவர்" என்று வழங்கப்பெறுவார். "வரைபவர்" "பெயரவர்"

"தேவைப் பெயரவர்." தேவையான நேர்வில், நாடப்பட வேண்டியவரது பெயரவருடன் கூடுதலாக அந்த மாற்றுச் சீட்டு அல்லது அதன் மேற்குறிப்பு எதிலும் எவரேனும் நபரின் பெயர் தரப்பட்டிருக்கும்போது, அத்தகைய நபர், "தேவைப்பெயரவர்" என்று வழங்கப்பெறுவார்.

"ஏற்குநர்." மாற்றுச் சீட்டின்மீது அல்லது அது ஒன்றுக்கு மேற்பட்ட பகுதிகளோடு இருக்குமாயின், அத்தகைய பகுதிகளில் ஒன்றின்மீது, பெயரவர் தம் இசைவைக் குறிக்கும் கையொப்பமிட்டு, அதனைக் கைக்கொண்டிருப்பவருக்கு அல்லது அவர் சார்பில் நபர் எவருக்கும் அதனை ஒப்படைத்த பின்பு, அல்லது தாம் அவ்வாறு கையொப்பமிட்டிருப்பதற்கான அறிவிப்பினை கொடுத்த பின்பு, அவர், "ஏற்குநர்" என்று வழங்கப்பெறுவார்.

"மதிப்பளிப்புக்கு ஏற்குநர்." ஏற்காமைக்காக அல்லது மேற்பட்ட பிணையத்திற்காக மாற்றுச் சீட்டு ஒன்று மறுப்புக் குறிக்கப்பட்டிருக்கும்போது, அல்லது மறுப்புக் குறிப்பெழுதப்பட்டிருக்கும் போது அதன்மீதான மறுப்புக் குறிப்புடன் வரைபவரின் அல்லது மேற்குறிப்பெழுதுநர்களில் எவருக்கும் மதிப்பளிப்புக்கு நபர் எவரும், அதனை ஏற்பாரானால், அத்தகைய நபர், "மதிப்பளிப்புக்கு ஏற்குநர்" என வழங்கப்பெறுவார்.

"செலுத்தப்படுநர்." முறையாவணத்தில் பெயர் குறிக்கப்பட்ட எந்த நபரிடம் அல்லது எந்த நபரின் ஆணையின்படி அந்த முறையாவணத்திற்குப் பணம் செலுத்தப்பட வேண்டும் என்று பணிக்கப்படுகிறதோ அந்த நபர் "செலுத்தப்படுநர்" என்று வழங்கப்பெறுவார்.

"கைக்கொண்டிருப்பவர்." *8.* கடனுறுதிச் சீட்டு, மாற்றுச் சீட்டு அல்லது காசோலை ஒன்றைக் கைக் கொண்டிருப்பவர் தம் சொந்தப் பெயரில் அதன் உடைமையைக் கொண்டிருப்பதற்கும், அதற்குரிய தரப்பினர்களிடமிருந்து அதன்மேல் கொடுபட வேண்டிய தொகையைப் பெறுவதற்கும் அல்லது தண்டல் செய்வதற்கும் உரிமை கொண்ட நபர் எவரும் என்று பொருள்படும்.

கடனுறுதிச் சீட்டு, மாற்றுச் சீட்டு அல்லது காசோலை இழக்கப்படுகிற அல்லது அழிக்கப்படுகிறவிடத்து, அத்தகைய இழப்பின்போது அல்லது அழிவின்போது அதற்கு அவ்வாறு உரிமைகொண்ட நபரே அதனைக் கைக்கொண்டிருப்பவர் ஆவார்.

"முறைப்படி கைக் கொண்டிருப்பவர்." *9.* "முறைப்படி கைக்கொண்டிருப்பவர்" என்பது, கடனுறுதிச் சீட்டில், மாற்றுச் சீட்டில் அல்லது காசோலையில் சொல்லப்பட்ட தொகை செலுத்தத்தக்கதாவதற்கு முன்பு மற்றும் எவரிடமிருந்து நபர் எவரும் தம்முடைய உரிமை மூலத்தை அடையப் பெற்றாரோ, அந்த நபரின் உரிமை மூலத்தில் குறைபாடு எதுவும் இருந்தது என்று நம்புவதற்குப் போதுமான காரணம் பெற்றிராமல், கொணர்பவருக்குச் செலுத்தத்தக்கதாயின், எவர் மறுபயனுக்காக அதன் உடைமையாளர் ஆனாரோ அந்த நபர்.

அல்லது, ஆணையின்படி செலுத்தத்தக்கதாயின், செலுத்தப்படுநர் அல்லது மேற்குறிப்பு பெறுநர் என்று பொருள்படும்.

"முறைப்படியான செலுத்தம்". *10.* "முறைப்படியான செலுத்தம்" என்பது, முறையாவணத்தில் மேலெழுந்த வாரியாகத் தோன்றுகின்ற நோக்கத்திற்கிணங்கவும், நல்லெண்ணத்துடனும், கவனக் குறைவின்றியும், அதை உடைமையில் கொண்டிருக்கிற நபர் எவருக்கும் அதில் சொல்லப்பட்ட தொகையின் செலுத்தத்தைப் பெறுவதற்கு அவர் உரிமை கொண்டவராகார் என்று நம்புவதற்குத் தகுமான காரணத்தை ஏற்படுத்தாத சூழ்நிலைகளில் செய்யப்பட்ட செலுத்தம் எனப் பொருள்படும்.

"உள்நாட்டு முறையாவணம்." *11.* இந்தியாவில் வரையப்பட்ட அல்லது எழுதப்பட்ட, மற்றும் இந்தியாவில் செலுத்தத்தக்கதென எழுதப்பட்ட அல்லது இந்தியாவில் குடியிருக்கிற நபர் எவரின் பெயருக்கே வரையப்பட்ட கடனுறுதிச் சீட்டு, மாற்றுச் சீட்டு அல்லது காசோலையானது, "உள்நாட்டு முறையாவணம்" என்று கொள்ளப்படுதல் வேண்டும்.

"அயல்நாட்டு முறையாவணம்." *12.* அவ்வாறு வரையப்படாத, எழுதப்படாத அல்லது செலுத்தத்தக்கதென எழுதப்படாததான அத்தகைய முறையாவணம் எதுவும், "அயல்நாட்டு முறையாவணம்" என்று கொள்ளப்படுதல் வேண்டும்.

"மாற்று முறையாவணம்". *13. (1)* "மாற்று முறையாவணம்" என்பது, ஆணையின்படி அல்லது அதனைக் கொணருபவருக்கு பணம் செலுத்தத்தக்கதான கடனுறுதிச் சீட்டு, மாற்றுச் சீட்டு அல்லது காசோலை எனப் பொருள்படும்.

விளக்கம் (i)—எந்தக் கடனுறுதிச் சீட்டு, மாற்றுச் சீட்டு அல்லது காசோலை ஆணையின்படி செலுத்தத்தக்கது என்று வெளிப்படுத்தப்படுகிறதோ அல்லது குறிப்பிட்ட நபருக்குச் செலுத்தத்தக்கது என்று வெளிப்படுத்தப்படுகிறதோ, ஆனால், உரிமைமாற்றம் செய்வதைத் தடை செய்கிற அல்லது அது உரிமை மாற்றம் செய்யப்படத்தக்கது ஆகாது என்ற உட்கருத்தைச் சுட்டிக்காட்டுகிற சொற்களைக் கொண்டிராத அந்தக் கடனுறுதிச் சீட்டு, மாற்றுச் சீட்டு அல்லது காசோலையானது அவ்வாறு செலுத்தத்தக்கதாகும்.

விளக்கம் (ii)—எந்தக் கடனுறுதிச் சீட்டு, மாற்றுச் சீட்டு அல்லது காசோலை கொணர்பவருக்குச் செலுத்தத்தக்கது என்று வெளிப்படுத்தப்படுகிறதோ அல்லது ஒரே ஒரு அல்லது கடைசியாகவுள்ள மேற்குறிப்பு ஒரு வெற்று மேற்குறிப்பாக உள்ளதோ அந்தக் கடனுறுதிச் சீட்டு, மாற்றுச் சீட்டு அல்லது காசோலையானது அவ்வாறு செலுத்தத்தக்கதாகும்.

விளக்கம் (iii)—ஒரு கடனுறுதிச் சீட்டு, மாற்றுச் சீட்டு அல்லது காசோலை, முதன்முதலாகவோ அல்லது மேற்குறிப்பு வாயிலாகவோ, ஒரு குறித்துரைக்கப்பட்ட நபரின் ஆணைப்படி, ஆனால், அவருக்கோ அவரது ஆணையின்படியோ அல்லாமல், செலுத்தத்தக்கது என்று வெளிப்படுத்தப்படுகிறவிடத்து, அவ்வாறு இருந்தபோதிலும், அது அவரது தெரிவின்மேல் அவருக்கோ அவரது ஆணையின்படியோ செலுத்தத்தக்கதாகும்.

(2) ஒரு மாற்று முறையாவணம் கூட்டாக, இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட செலுத்தப்படுநர்களுக்குச் செலுத்தத்தக்கது என எழுதப்படலாம் அல்லது மாற்றாக இருவரில் ஒருவருக்கு அல்லது பல செலுத்தப்படுநர்களில் ஒருவர் அல்லது சிலருக்குச் செலுத்தத்தக்கது என எழுதப்படலாம்.

14. ஒரு கடனுறுதிச் சீட்டு, மாற்றுச் சீட்டு அல்லது காசோலையானது நபர் எவருக்கும், அதைக் கைக்கொண்டிருப்பவராக அந்த நபரை ஆக்கும்பொருட்டு உரிமைமாற்றம் செய்யப்படுகிறபோது, அந்த முறையாவணம் ஆவண மாற்றம் பெற்றதாகக் கூறப்படும். *ஆவண மாற்றுதல்.*

15. ஒரு மாற்று முறையாவணத்தை எழுதுநர் அல்லது கைக்கொண்டிருப்பவர் அவ்வாறு எழுதுநர் என்றல்லாமல், பிறவாறாக ஆவண மாற்றுதல் நோக்கத்திற்காக, அதன் பின்புறத்தில் அல்லது அதன் முன்புறத்தில் அல்லது அதனோடு இணைக்கப்பட்ட ஒரு துண்டுத் தாளின் மேல் கையொப்பமிடுகிறபோது அல்லது அதே நோக்கத்திற்காக ஒரு முத்திரைத்தாளில் அதனை ஒரு மாற்று முறையாவணமாக்கும் உட்கருத்தோடு அவ்வாறு கையொப்பமிடுகிறபோது அவர் அதை மேற்குறிப்பு எழுதுவதாகக் கூறப்படுவார். மற்றும் "மேற்குறிப்பெழுதுநர்" என்றும் வழங்கப்பெறுவார். *மேற்குறிப்பு.*

16 (1) "மேற்குறிப்பெழுதுநர்" தமது பெயரை மட்டுமே கையொப்பமிடுவராயின், மேற்குறிப்பானது "வெற்று" மேற்குறிப்பு என்று கூறப்படும்; மற்றும் முறையாவணத்தில் சொல்லப்பட்ட தொகையைக் குறித்துரைக்கப்பட்ட ஒரு நபருக்கோ அவரது ஆணையின்படியோ செலுத்துவதற்கு ஒரு பணிப்புரையை அவர் கோருவாராயின், அந்த மேற்குறிப்பானது, "முழுமையான" மேற்குறிப்பு என்று கூறப்படும்; மற்றும் அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட நபர் அந்த முறையாவணத்தின் "மேற்குறிப்புப் பெறுநர்" என்று வழங்கப்பெறுவார். *"வெற்று" மற்றும் "முழுமையான" மேற்குறிப்பு.*

(2) செலுத்தப்படுநர் ஒருவர் தொடர்பான இந்தச் சட்டத்தின் வகையங்கள் தேவையான மாற்றமைவுகளோடு மேற்குறிப்புப் பெறுநருக்குப் பொருந்துதல் வேண்டும். *"மேற்குறிப்புப் பெறுநர்."*

17. முறையாவணமானது, கடனுறுதிச் சீட்டாகவோ மாற்றுச் சீட்டாகவோ பொருள் கொள்ளப்படக்கூடுமிடத்து, அதைக் கைக்கொண்டிருப்பவர் தமது தெரிவின்படி அதை இரண்டில் ஏதேனும் ஒன்றாக எடுத்துக்கொள்ளலாம். மற்றும் அந்த முறையாவணமானது அந்தக் காலமுதல்ாக அவ்வாறே எடுத்துக்கொள்ளப்படுதல் வேண்டும். *பொருள் மயக்கமுடைய முறை யாவணங்கள்.*

18. செலுத்துவதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது செலுத்தப்பட வேண்டும் என்று ஆணையிடப்பட்ட ஒரு தொகையானது, எண்களிலும், சொற்களிலும், வெவ்வேறாகக் குறிக்கப்படுமாயின், எழுத்தில் குறிக்கப்பட்டிருக்கும் தொகையைச் செலுத்துவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது செலுத்தப்பட வேண்டும் என்று ஆணையிடப்பட்ட தொகை ஆகும். *தொகையானது, எண்களிலும், சொற்களிலும் வெவ்வேறாகக் குறிக்கப்பட்டிருக்குமிடத்து.*

19. எந்தக் கடனுறுதிச் சீட்டில் அல்லது மாற்றுச் சீட்டில் செலுத்தத்துக்கான காலம் எதுவும் குறித்துரைக்கப்பட்டிருக்கவில்லையோ அந்தக் கடனுறுதிச் சீட்டு அல்லது மாற்றுச் சீட்டு மற்றும் காசோலை கோரியவுடன் செலுத்தத்தக்கன ஆகும். *கோரியவுடன் செலுத்தத்தக்க முறை யாவணங்கள்.*

நிறைவுறாத முத்திரை வில்லையிட்ட முறை யாவணங்கள்.

20. இந்தியாவில் அப்போது செல்லாற்றலில் இருக்கிற மாற்று முறையாவணங்கள் தொடர்பான சட்டத்திற்கிணங்க முத்திரைவில்லையிட்ட ஒரு தாளை அது முழுவதும் எழுதப்படாதிருந்தாலும் அல்லது அதில் ஒரு முற்றுப் பெறாத முறையாவணம் எழுதப்பட்டிருந்தாலும் ஒரு நபர் கையொப்பமிட்டு அதைப் பிறிதொருவருக்கு ஒப்படைக்கிறவிடத்து, அவர் அதைக் கைக்கொண்டிருப்பவருக்கு அதன் மேல் அதில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தொகைக்கு முத்திரைவில்லை உள்ளடக்கும் தொகை எவ்வளவோ அதற்கு மேற்படாமல் எழுதித் தர அல்லது நேர்வுக்கேற்ப, மாற்று முறையாவணத்தை முழுமையானதாக்க முகநிலை அதிகாரம் வழங்குகிறார். அவ்வாறு கையொப்பமிடுகிற ஆள், எந்தத் திறமுறையில் அதில் கையொப்பமிட்டிருக்கிறாரோ அந்தத் திறமுறையில் முறைப்படி கைக்கொண்டிருப்பவருக்கு அந்தத் தொகையைச் செலுத்துவதற்குக் கடப்பாடுடையவர் ஆவார்:

வரம்புரையாக: முறைப்படி கைக்கொண்டிருப்பவர் அல்லாத பிற நபர் எவரும், அந்த முறையாவணத்தை ஒப்படைக்கிற நபரிடமிருந்து, அதன்படி செலுத்தம் செய்யப்படுவதற்கு அவரால் கருதப்பட்ட தொகைக்கு மிகுதியான தொகை எதனையும் தண்டல் செய்தல் ஆகாது.

"காட்டியவுடன்" "காட்டுக் கேட்டவுடன்", "காட்டியபின்பு"

21. கடனுறுதிச் சீட்டில் அல்லது மாற்றுச் சீட்டில் "காட்டியவுடன்" மற்றும் "காட்டிக் கேட்டவுடன்" என்னும் சொற்றொடர்கள் கோரியவுடன் என்று பொருள்படும். "காட்டிய பின்பு" என்னும் சொற்றொடர் கடனுறுதிச் சீட்டில் காண்பதற்காகக் காட்டிக் கோரிய பின்பு என்றும், மாற்றுச் சீட்டு ஒன்றில் ஏற்புக்குப் பின்பு அல்லது ஏற்காமைக்கான மதிப்பு மறுப்புக் குறிப்புக்குப் பின்பு அல்லது ஏற்காமைக்கான மறுப்புக் குறிப்பு எழுதப்பட்ட பின்பு என்று பொருள்படும்.

"முதிர்வுக் காலம்."

22. கடனுறுதிச் சீட்டின் அல்லது மாற்றுச் சீட்டின் முதிர்வுக் காலம் என்பது, அது எந்தத் தேதியில் கொடுபட வேண்டியதாகிறதோ, அந்தத் தேதியாகும்.

சலுகை நாட்கள்

கோரியவுடன், காட்டியவுடன் அல்லது காட்டிக் கேட்டவுடன் செலுத்தப்பட வேண்டும் என்று வெளிப்படுத்தப்படாத கடனுறுதிச் சீட்டு அல்லது மாற்றுச் சீட்டு ஒவ்வொன்றும் எந்த நாளில் செலுத்தப்பட வேண்டும் என்று வெளிப்படுத்தப்படுகிறதோ அந்த நாளுக்குப் பின்பு மூன்றாம் நாள் முதிர்வுக் காலத்தை அடையும்.

எந்த மாற்றுச் சீட்டின் அல்லது கடனுறுதிச் சீட்டின் நாள் அல்லது காட்டிய பின்பு இத்தனை மாதத்தில் செலுத்தத்தக்கது என்றிருக்கிறதோ அதற்கு முதிர்வுக் காலத்தைக் கணக்கிடுதல்.

23. குறிப்பிட்ட தேதிக்குப் பின்பு அல்லது காட்டிய பின்பு அல்லது குறிப்பிட்ட நிகழ்ச்சிக்குப் பின்பு குறிக்கப்பட்ட ஒரு சில மாதங்களில் செலுத்தத்தக்கதாக எழுதப்பட்டுள்ள கடனுறுதிச் சீட்டின் அல்லது மாற்றுச் சீட்டின் முதிர்வுக் காலத்தைக் கணக்கிடுகையில், குறிக்கப்பட்ட கால அளவு அந்த முறையாவணத்தில் இடப்பட்ட தேதி அல்லது ஏற்புக்காக அல்லது காண்பதற்காகக் காட்டிக் கோரிய நாளன்று அல்லது ஏற்காமைக்காக மதிப்பு மறுப்புக் குறிப்பு எழுதப்பட்ட நாளன்று அல்லது ஏற்காமைக்காக மறுப்புக் குறிப்பு எழுதப்பட்ட நாளன்று அல்லது அந்த நிகழ்ச்சி நிகழ்கிற நாளன்று அல்லது அந்த முறையாவணம் காட்டிய பின்பு குறிக்கப்பட்ட ஒரு சில மாதங்களில் செலுத்தத்தக்கதாக எழுதப்பட்டுள்ள மாற்றுச் சீட்டாக இருந்து அது மதிப்பளிப்புக்கு ஏற்கப்பட்டிருக்குமிடத்து, அது அவ்வாறு ஏற்கப்பட்ட நாளின் நேரிணையாக இருக்கிற அந்த மாதத்தின் தேதியன்று அந்தக் காலம் முடிவடைவதாகக் கொள்ளப்படுதல் வேண்டும். அந்தக் கால அளவு முடிவடையும் மாதம், நேரிணையான நாள் எதையும் கொண்டிருக்கவில்லையெனில், அத்தகைய மாதத்தின் கடைசி நாளன்று அந்தக் கால அளவு முடிவடைந்ததாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**எடுத்துக்காட்டுகள்**

(அ) 1878 சனவரி 29ஆம் தேதியிடப்பட்ட ஒரு மாற்று முறையாவணம், அந்தத் தேதிக்குப் பின்பு ஒரு மாதத்தில் செலுத்தத்தக்கதாக எழுதப்படுகிறது. அந்த முறையாவணம், 1878 பிப்ரவரி 28ஆம் தேதிக்குப் பின்பு மூன்றாம் நாளன்று முதிர்வுக் காலத்தை அடைகிறது.

(ஆ) 1878 ஆகஸ்ட் 30ஆம் தேதியிடப்பட்ட மாற்று முறையாவணம், அந்தத் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குப் பின்பு, செலுத்தத்தக்கதாக எழுதப்படுகிறது. அந்த முறையாவணம் 1878 டிசம்பர் மாதம் 3ஆம் தேதியன்று முதிர்வுக் காலத்தை அடைகிறது.

(இ) 1878 ஆகஸ்ட் மாதம் 31ஆம் தேதியிடப்பட்ட கடனுறுதிச் சீட்டு அல்லது மாற்றுச் சீட்டானது அந்தத் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குப் பின்பு செலுத்தத்தக்கதாக எழுதப்படுகிறது. அந்த முறையாவணம் 1878 டிசம்பர் மாதம் 3ஆம் தேதியன்று முதிர்வுக் காலத்தை அடைகிறது.

எந்த மாற்றுச் சீட்டின் அல்லது கடனுறுதிச் சீட்டின் நாள் அல்லது காட்டிய பின்பு இத்தனை நாட்களில் செலுத்தத்தக்கது என்றிருக்கிறதோ அதற்கு முதிர்வுக் காலத்தைக் கணக்கிடுதல்.

24. குறிப்பிடப்பட்ட தேதிக்குப் பின்பு, அல்லது காட்டிய பின்பு அல்லது குறிப்பிட்ட நிகழ்ச்சிக்குப் பின்பு குறிப்பிட்ட ஒரு சில நாட்களுக்குப் பின் செலுத்தத்தக்கதாக எழுதப்பட்டுள்ள கடனுறுதிச் சீட்டின் அல்லது மாற்றுச் சீட்டின் முதிர்வுக் காலத்தைக் கணக்கிடுகையில், அந்தத் தேதியுடைய அல்லது ஏற்புக்காக அல்லது காண்பதற்காகக் காட்டிக் கோரிய அல்லது ஏற்காமைக்கான மறுப்புக் குறிப்பு எழுதப்பட்ட தேதியின் அல்லது அந்த நிகழ்ச்சி நிகழ்கிற தேதியின் நாள் நீக்கப்படுதல் வேண்டும்.

முதிர்வுக் கால நாள் ஒரு விடுமுறையாக இருக்கும்போது.

25. கடனுறுதிச் சீட்டின் அல்லது மாற்றுச் சீட்டின் முதிர்வுக் கால நாள் ஒரு பொது விடுமுறையாக இருக்கும்போது, அந்த முறையாவணம், அதற்கு அடுத்து முந்திய அலுவல் நாளன்று கொடுபட வேண்டியதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

விளக்கம்.—பொது விடுமுறை நாள் என்னும் சொற்றொடர் ஞாயிற்றுக் கிழமைகளையும் மற்றும் மைய அரசாங்கத்தால் அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக ஒரு பொது விடுமுறை நாளென்று விளம்பப்பட்ட ஏதேனும் பிற நாளையும் உள்ளடக்கும்.

## அத்தியாயம் III

## கடனுறுதிச் சீட்டுகள், மாற்றுச் சீட்டுகள், காசோலைகள் ஆகியவற்றின் தரப்பினர்

கடனுறுதிச் சீட்டுகள் முதலானவற்றை எழுதுவது முதலான வற்றுக்கான திறமுறை.

26. எந்தச் சட்டத்திற்கு ஒருவர் உட்பட்டவராக இருக்கிறாரோ அந்தச் சட்டத்திற்கிணங்க, ஒப்பந்தம் செய்துகொள்ளத் திறனுடைய ஒவ்வொரு நபரும், கடனுறுதிச் சீட்டை, மாற்றுச் சீட்டை அல்லது காசோலையை எழுதுவது, வரைவது, ஏற்பது, மேற்குறிப்பெழுதுவது, ஒப்படைப்பது மற்றும் ஆவண மாற்றம் செய்வது வாயிலாகத் தம்மையே கட்டுப்படுத்திக் கொள்ளலாம் அல்லது கட்டுப்படுத்தப்படலாம்.

உரிமை வயது அடையாதவர்.

உரிமை வயது அடையாதவர் ஒருவர், தம்மைத் தவிர தரப்பினர்கள் அனைவரையும் கட்டுப்படுத்தும் வகையில் அத்தகைய முறையாவணங்களை வரையலாம், மேற்குறிப்பெழுதலாம், ஒப்படைப்புச் செய்யலாம் மற்றும் ஆவண மாற்றுச் செய்யலாம்.

இதில் அடங்கியுள்ள எதுவும், அத்தகைய முறையாவணங்களை எழுத, மேற்குறிப்பெழுத அல்லது ஏற்புச் செய்ய நிகழுறு காலத்தில் செல்லாற்றலிலுள்ள சட்டத்தின்படி, அவை அவ்வாறு அதிகாரமளிக்கப்படுகின்ற நேர்வுகளில் தவிர, ஒரு கூட்டுருமத்திற்கு அதிகாரமளிப்பதாகக் கொள்ளப்படுதல் ஆகாது.

முகவாண்மை.

27. பிரிவு 26இல் சொல்லப்பட்டவாறு, தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ளத்தக்க அல்லது, கட்டுப்படுத்தப்படத்தக்க ஒவ்வொரு நபரும் அவரது பெயரில் செயற்பட, உரியவாறு அதிகாரமளிக்கப்பட்ட ஒரு முகவரால், அவ்வாறு தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ளலாம், அல்லது கட்டுப்படுத்தப்படலாம்.

தொழிலை நடத்துவதற்கு, மற்றும் அடைகடன்களைப் பெறுவதற்கும், தீர்ப்பதற்குமான பொதுவானதோர் அதிகாரம் தம் முதல்வரைக் கட்டுப்படுத்தும் வகையில் மாற்றுச் சீட்டுகளை ஏற்பதற்கும் அல்லது மேற்குறிப்பெழுதுவதற்குமான ஓர் அதிகார உரிமையை அந்த முகவருக்கு வழங்காது.

மாற்றுச் சீட்டுகளை வரைவதற்கான ஓர் அதிகாரம், மேற்குறிப்பெழுதுவதற்கான அதிகாரத்தைத் தானே அளிக்காது.

கையொப்ப மிடும் முகவரின் கடப்பாடு.

28. ஒரு முகவர், கடனுறுதிச் சீட்டில், மாற்றுச் சீட்டில் அல்லது காசோலையில் முகவர் என்ற முறையில் கையெழுத்திடுவதாகவோ அல்லது அதனால் தாம் நேர்முகமாகப் பொறுப்பை மேற்கொள்ளும் கருத்தைக் கொண்டிருக்கவில்லை என்பதாகவோ சுட்டிக்காட்டாமல் கையொப்பமிடுவாராயின், முதல்வர் மட்டுமே கடப்பாடுடையவராகக் கொள்ளப்படுவார் என்ற நம்பிக்கையின் மேல் கையெழுத்துப்படி அவரைத் தூண்டியவர்கள் நீங்கலாக அந்த முறையாவணத்தின் மேல் தாமே நேர்முகமாகக் கடப்பாடுடையவர் ஆவார்.

கையொப்பமிடும் சட்டச் சார்பாற்றுநரின் கடப்பாடு.

29. இறந்து போன ஒருவரின், சட்டச் சார்பாற்றுநர் ஒரு கடனுறுதிச் சீட்டில், மாற்றுச் சீட்டில் அல்லது காசோலையில் கையொப்பமிடுவாராயின், அந்தச் சார்பாற்றுநர் என்ற முறையில், அவரால் பெறப்பட்ட சொத்திருப்புகளின் அளவுக்கு மட்டுமே தம்முடைய கடப்பாட்டை அவர் வெளிப்படையாக வரையறை செய்து கொண்டாலன்றி, அதன்மேல் தாமே நேர்முகமாகக் கடப்பாடுடையவர் ஆவார்.

வரைபவரின் கடப்பாடு.

30. மாற்றுச் சீட்டை அல்லது காசோலையை வரைபவர், அது பெயரவரால் அல்லது ஏற்குநரால் மதிப்பு மறுக்கப்படும் நேர்வில், அதைக் கைக்கொண்டு இருப்பவருக்குச் சரியீடு செய்வதற்குக் கட்டுப்பட்டவர் ஆவார். ஆனால், இதன் பின்பு வகைசெய்யப்பட்டவாறு வரைபவருக்கு மதிப்பு மறுத்ததற்கான உரிய அறிவிப்பு கொடுக்கப்பட்டிருத்தல் அல்லது அவர் பெற்றிருத்தல் வேண்டும்.

காசோலைப் பெயரவரின் கடப்பாடு.

31. காசோலைக்குப் பணம் செலுத்துவதற்கு முறையாகப் பயன்படுத்துவதற்கு வரைபவரின் போதுமான நிதியம், தம் கையில் வைத்திருக்கிற காசோலைப் பெயரவர் அவ்வாறு செய்வதற்கு வேண்டுறுத்தப்பட்டபோது அந்தக் காசோலைக்குப் பணம் செலுத்துதல் வேண்டும்; அவ்வாறு செலுத்தத் தவறுகையில், அத்தகைய தவறுகையால் விளையும் இழப்பு அல்லது சேதம் எதற்காகவும் அந்த வரைபவருக்குச் சரியீடு வழங்குதல் வேண்டும்.

கடனுறுதிச் சீட்டை எழுதுநரின் மற்றும் மாற்றுச் சீட்டை ஏற்குநரின் கடப்பாடு.

32. மாறான ஓர் ஒப்பந்தம் இல்லாதிருக்கையில், ஒரு கடனுறுதிச் சீட்டை எழுதுநரும் ஒரு மாற்றுச் சீட்டின் முதிர்வுக் காலத்திற்கு முன்பு ஏற்குநரும் அதற்கான தொகையை முறையே அந்தக் கடனுறுதிச்சீட்டின் அல்லது ஏற்பின், மேலெழுந்த வாரியாகத் தோன்றுகிற நோக்கத்திற்கிணங்க, முதிர்வுக் காலத்தில் செலுத்துவதற்குக் கட்டுப்பட்டவர் ஆவார்; மற்றும், மாற்றுச் சீட்டின் ஏற்குநர் அதன் முதிர்வுக் காலத்தில் அல்லது முதிர்வுக் காலத்திற்குப் பின்பு அதற்கான தொகையைக் கோரியவுடன் கைக்கொண்டிருப்பவருக்குச் செலுத்துவதற்குக் கட்டுப்பட்டவர் ஆவார்.

மேற்கூறப்பட்டவாறு செலுத்துவதற்குத் தவறுகையில், அந்த எழுதுநர் அல்லது ஏற்குநர் அந்தக் கடனுறுதிச் சீட்டின் அல்லது மாற்றுச் சீட்டின் எவரேனும் தரப்பினருக்கு அவரால் ஏற்பட்ட மற்றும் அத்தகைய தவறுகையால் விளைந்த ஏதேனும் இழப்பு அல்லது சேதத்திற்குச் சரியீடு கொடுக்கக் கட்டுப்பட்டவர் ஆவார்.

தேவைப்படுகிற அல்லது மதிப்பளிப்புக்கான நேர்வில் தவிர, வரைபவர் மட்டுமே ஏற்குநராக இருக்க முடியும்.

33. மாற்றுச் சீட்டின் வரைபவர் அல்லது பல்வேறு வரைபவர்கள் அனைவரும் அல்லது அவர்களில் சிலரும் அல்லது தேவைப்படும் நேர்வில், வரைபவர் ஒருவராக அதில் பெயர் குறிக்கப்பட்ட நபர் அல்லது மதிப்புக்கு ஏற்குநர் ஒருவர் தவிர, நபர் எவரும் ஓர் ஏற்பின் வாயிலாகத் தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாது.

கூட்டாளிகள் அல்லாத பல்வேறு வரைபவர்களால் செய்யப்படும் ஏற்பு.

34. கூட்டாளிகள் அல்லாத பலர் ஒரு மாற்றுச் சீட்டில் பல்வேறு வரைபவர்களாக இருக்குமிடத்து, அவர்களில் ஒவ்வொருவரும், தமக்காக மட்டுமே அதை ஏற்கலாம்; ஆனால், அவர்களில் எவரும் பிறர் ஒருவருக்காக அவரது அதிகாரமின்றி அதனை ஏற்க முடியாது.

மேற்குறிப் பெழுதுநரின் கடப்பாடு.

35. மாறான ஓர் ஒப்பந்தம் இல்லாதிருக்கையில், ஒரு மாற்று முறையாவணத்தை அதன் முதிர்வுக் காலத்திற்கு முன்பு மேற்குறிப்பெழுதுகிற மற்றும் ஒப்படைக்கிற, மேலும் தனது சொந்தக் கடப்பாட்டை வெளிப்படையாக விலக்குவதாகவோ அதனை வரைக்கட்டுக்கு உட்படுத்துவதாகவோ அத்தகைய மேற்குறிப்பில் எழுதிக்கொள்ளாத எவராயினும், அதன் வாயிலாக, வரைபவரால், ஏற்குநரால் அல்லது எழுதுநரால் மதிப்பு மறுக்கப்பட்ட நேர்வில், பிந்திய கைக்கொண்டிருப்பவர் ஒவ்வொருவரும், அத்தகைய மதிப்பு மறுக்கப்பட்டதால், அத்தகைய கைக்கொண்டிருப்பவருக்கு விளைந்த இழப்பு அல்லது சேதம் எதற்காகவும் அவருக்குச் சரியீடு கொடுக்க அவர் கட்டுப்பட்டுவர் ஆவார்; ஆனால், இதில் இதற்குப் பின்பு வகை செய்யப்பட்டவாறு மதிப்பு மறுக்கப்பட்டது பற்றிய உரிய அறிவிப்பு அத்தகைய மேற்குறிப்பெழுதுநருக்குக் கொடுக்கப்பட்டிருத்தல் வேண்டும் அல்லது அவரால் பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

மதிப்பு மறுக்கப்பட்டதன் பின்பு, மேற்குறிப்பெழுதுநர் ஒவ்வொருவரும் கோரிய உடன் செலுத்தத்தக்க ஒரு முறையாவணத்தின் மேல் அதே கடப்பாடு உடையவராயிருப்பார்.

36. ஒரு மாற்று முறையாவணத்தின் முந்திய தரப்பினர் ஒவ்வொருவரும், அது உரியவாறு தீர்க்கப்படும் வரையில், அதனை முறைப்படி கைக்கொண்டிருப்பவர் ஒருவருக்கு கடப்பாடு உடையவராயிருப்பார்.

முறைப்படி கைக் கொண்டிருப் பவருக்கு முந்திய தரப்பினர்களின் கடப்பாடு.

37. கடனுறுதிச் சீட்டை அல்லது காசோலையை எழுதுநர், ஒரு மாற்றுச் சீட்டு ஏற்கப்படும் வரையில், அதனை வரைபவர் மற்றும் ஏற்குநர், மாறான ஓர் ஒப்பந்தம் இல்லாதிருக்கையில், முறையே அதன் மேல் முதன்மைக் கடனாளிகளைப் போன்று கடப்பாடு உடையவர் ஆவார். மற்றும் அதற்குரிய பிற தரப்பினர்கள் நேர்வுக்கேற்ப, எழுதுநர், வரைபவர் அல்லது ஏற்குநருக்கான பிணையர்கள் போன்று அதன்மேல் கடப்பாடு உடையவராயிருப்பார்.

எழுதுநர், வரைபவர், ஏற்குநர் ஆகியோர் முதன்மைக் கடனாளிகள்.

38. பிணையர் போன்று அவ்வாறு கடப்பாடுடைய தரப்பினர்களிடையே ஒவ்வொரு முந்திய தரப்பினரும், மாறான ஓர் ஒப்பந்தம் இல்லாதிருக்கையில், பிந்திய தரப்பினர் ஒவ்வொருவரைப் பொறுத்தும் ஒரு முதன்மைக் கடனாளி போன்றே அதற்குக் கடப்பாடு உடையவராகவும் இருப்பார்.

பிந்திய தரப்பினர் ஒவ்வொரு வரையும் பொறுத்து முந்திய தரப்பினர் ஒரு முதன்மைக் கடனாளியாக இருப்பார்.

பிணையப் பொறுப்பு.

### எடுத்துக்காட்டு

"அ" என்பவர் தம்முடைய சொந்த ஆணையின்படி செலுத்தத்தக்க ஒரு மாற்றுச் சீட்டை "ஆ" என்பவர் பேரில் வரைகிறார். அவரும் ஏற்றுக்கொள்கிறார். பிற்பாடு "அ" அந்த மாற்றுச் சீட்டில், "இ" என்பவருக்கும், "இ", "ஈ" என்பவருக்கும், "ஈ", "உ" என்பவருக்கும் மேற்குறிப்பெழுதுகிறார்கள். "ஆ" மற்றும் "உ" க்கிடையே "ஆ" முதன்மைக் கடனாளி ஆவார்; மற்றும் "அ", "இ", "ஈ" ஆகியோர் அவருடைய பிணையர்கள் ஆவார். "உ" மற்றும் "அ"-வுக்கிடையே "அ" முதன்மைக் கடனாளி ஆவார்; மற்றும் "இ" யும், "ஈ"-யும் அவருடைய பிணையர்கள் ஆவார். "உ" மற்றும் "இ"-வுக் கிடையே "இ" முதன்மைக் கடனாளி ஆவார், மற்றும் "ஈ" அவருடைய பிணையர் ஆவார்.

39. ஏற்கப்பட்ட மாற்றுச் சீட்டு ஒன்றைக் கைக்கொண்டிருப்பவர் ஏற்குநருடன் இந்திய ஒப்பந்தச் சட்டம், 1872 இன் பிரிவு 134 அல்லது 135 இன்படி 9/1872 பிற தரப்பினர்களை விடுவிக்கிற ஒப்பந்தம் எதனையும் செய்துகொள்ளும்போது, அதனைக் கைக்கொண்டிருப்பவர் பிற தரப்பினர்களைப் பொறுப்பாக்குகிற தம் உரிமையை வெளிப்படையாக நிறுத்தி வைத்துக்கொள்ளலாம்; மற்றும் அத்தகைய நேர்வில் அவர்கள் பொறுப்புரிமையினின்று விடுவிக்கப்படமாட்டார்கள்.

மேற்குறிப்பெழுது நருக்குள்ள கடப்பாட்டை விடுவித்தல்.

40. ஒரு மாற்று முறையாவணத்தைக் கைக்கொண்டிருப்பவர் மேற்குறிப்பெழுதுநரின் இசைவின்றி, முந்திய தரப்பினர் ஒருவருக்கு எதிரான மேற்குறிப்பெழுதுநருக்குள்ள தீர்வழியை அழிக்குமிடத்து அல்லது பழுதாக்குமிடத்து, முதிர்வுக் காலத்தில் அந்த முறையாவணம், பணம் செலுத்தித் தீர்க்கப்பட்டிருந்தாற்போன்றே அதே அளவுக்கு, மேற்குறிப்பெழுதுநர் கைக்கொண்டிருப்பவருக்குத் தாம் கடப்பாடு உடையவராக இருப்பதினின்றும் விடுவிக்கப்படுவார்.

### எடுத்துக்காட்டுகள்

"அ" என்பவர், "ஆ" என்பவரின் ஆணையின்படி செலுத்தத்தக்கதென எழுதப்பட்ட மாற்றுச் சீட்டு ஒன்றைக் கைக்கொண்டிருப்பவராக இருக்கிறார். அந்தச் சீட்டில் பின்வரும் வெற்று மேற்குறிப்புகள் அடங்கியுள்ளன:-

முதல் மேற்குறிப்பு, "ஆ"

இரண்டாம் மேற்குறிப்பு, "பீட்டர் வில்லியம்ஸ்".

மூன்றாம் மேற்குறிப்பு, "ரைட் மற்றும் நிறுமம்".

நான்காம் மேற்குறிப்பு, "ஜான் ரொஸாரியோ".

ஜான் ரொஸாரியோவுக்கு எதிராகத் தொடரும் உரிமை வழக்கில், "அ" இந்த மாற்றுச்சீட்டை முன் வைக்கிறார். ஜான் ரொஸாரியோவின் இசைவின்றி, அதில் உள்ள பீட்டர் வில்லியம்ஸ் என்பவரும் ரைட் மற்றும் நிறுமமும் செய்த மேற்குறிப்புகளை அடித்து விடுகிறார். ஜான் ரொஸாரியோவிடமிருந்து "அ", ஏதொன்றையும் தண்டல் செய்வதற்கு உரிமை கொண்டவர் ஆவார்.

மேற்குறிப்பு பொய்ப்புனைவு செய்யப்பட்ட போதிலும் ஏற்குநர் கட்டுப்படுதல்.

41. ஏற்கெனவே மேற்குறிப்பெழுதப்பட்ட மாற்றுச்சீட்டை ஏற்குநர், அந்த மாற்றுச்சீட்டைத் தாம் ஏற்றபோது, அத்தகைய மேற்குறிப்பானது பொய்ப்புனைவு செய்யப்பட்டது என்று அறிந்திருப்பாராயின் அல்லது நம்புவதற்குக் காரணம் பெற்றிருப்பாராயின், அந்த மேற்குறிப்பானது, பொய்ப்புனைவு செய்யப்பட்டது என்ற காரணத்தால், அவர் தம் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்படமாட்டார்.

புனைந்து கொள்ளப்பட்ட பெயரில் வரையப்பட்ட மாற்றுச் சீட்டின் ஏற்பு.

42. புனைந்துகொள்ளப்பட்ட பெயரில் வரையப்பட்டது, வரைபவரின் ஆணையின்படி செலுத்தத்தக்கதுமான மாற்றுச்சீட்டின் ஏற்குநர் ஒருவர், வரைபவரின் கையொப்பம் வரைபவரின் கையெழுத்தியிலேயே உள்ளதும் வரைபவரால் எழுதப்பட்டதாகப் புலப்படுகிறதுமான ஒரு மேற்குறிப்பின்படி உரிமை கொண்டாடுகிற, எவரேனும் முறைப்படி கைக்கொண்டிருப்பவர், அத்தகைய பெயர் புனைந்துகொள்ளப்பட்டது என்ற காரணத்தால் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்படமாட்டார்.

மறுபயன் இல்லாமல் மாற்று முறையாவணம் எழுதித் தரப்படுதல் முதலியவை.

43. மறுபயன் இல்லாமல் அல்லது பயனற்றுப்போகிற மறுபயனுக்காக எழுதப்பட்ட, வரையப்பட்ட, ஏற்கப்பட்ட, மேற்குறிப்பெழுதப்பட்ட அல்லது உரிமை மாற்றம் செய்யப்பட்ட ஒரு மாற்றுமுறையாவணம் ஒரு நடவடிக்கைக்குரிய தரப்பினரிடையே செலுத்தத்துக்கான கடமைப்பொறுப்பு எதையும் உள்ளடக்காது. ஆனால், அத்தகைய தரப்பினர் எவரும், மறுபயனுக்காக ஒரு கைக்கொண்டிருப்பவருக்கு மேற்குறிப்புடனோ அல்லது மேற்குறிப்பு இல்லாமலோ அந்த முறையாவணத்தை உரிமைமாற்றம் செய்வாராயின், அத்தகைய கைக்கொண்டிருப்பவரும் அவரிடமிருந்து உரிமை மூலத்தை அடையப்பெற்றுள்ள பிந்திய கைக்கொண்டிருப்பவர் ஒவ்வொருவரும், மறுபயனுக்காகச் செய்குநரிடமிருந்து அல்லது அதன் முந்திய தரப்பினர் எவரிடமிருந்தும் அத்தகைய முறையாவணத்தின்பேரில், கொடுபட வேண்டிய தொகையை வசூல் செய்யலாம்.

விளக்கம் I—எந்தத் தரப்பினருக்கு உதவுவதற்காக ஒரு மாற்றுமுறையாவணம் எழுதப்பட்டதோ, வரையப்பட்டதோ, ஏற்கப்பட்டதோ அல்லது மேற்குறிப்பெழுதப்பட்டதோ, அந்தத் தரப்பினர் எவரும், அதற்குரிய தொகையைச் செலுத்துவாராயின், தமக்கு உதவுவதற்காக அத்தகைய முறையாவணத்தின் ஒரு தரப்பினராக ஆகியுள்ளவர் எவரிடமிருந்தும் அந்தச் சீட்டின் மேல் அத்தகைய தொகையை வசூல் செய்ய முடியாது.

விளக்கம் II—ஒரு முறையாவணத்தின் எந்தத் தரப்பினர் பிற தரப்பினரைத் தாம் முழுவதும் செலுத்த, அல்லது நிறைவேற்றத் தவறியுள்ள மறுபயனுக்காக ஒரு முறையாவணத்தை எழுதிக் கொடுக்கும்படி, வரையும்படி, ஏற்கும்படி, மேற்குறிப்பெழுதும்படி அல்லது உரிமைமாற்றம் செய்யும்படி தூண்டியிருக்கிறாரோ அந்தத் தரப்பினர் எவரும், தாம் உள்ளபடியே செலுத்தியுள்ள அல்லது நிறைவேற்றியுள்ள மறுபயன் (ஏதேனுமிருப்பின்) அதன் மதிப்புக்கு மேற்படும் ஒரு தொகையை அதன்பேரில் வசூல் செய்தல் ஆகாது.

மறுபயன் பணத்தின் ஒரு பகுதி இல்லாது போதல் அல்லது பயனற்றுப் போதல்.

44. எந்த மறுபயனுக்காக ஒரு கடனுறுதிச் சீட்டில், மாற்றுச்சீட்டில் அல்லது காசோலையில் ஒரு நபர் கையொப்பமிட்டிருக்கிறாரோ அந்த மறுபயனானது பணமாக இருந்து, அது முதன்முதலிலேயே அதில் ஒரு பகுதி இல்லாதிருக்கும்போது அல்லது ஒரு பகுதி பிந்திப் பயனற்றுப்போகும்போது, அத்தகைய கையொப்பமிட்டவருக்கு உடன் அடுத்துத் தொடர்புடைய கைக்கொண்டிருப்பவர் ஒருவர் அவரிடமிருந்து பெறுவதற்கு உரிமைகொண்ட தொகையானது விகிதப்படி குறைக்கப்படும்.

விளக்கம்.—ஒரு மாற்றுச்சீட்டை வரைபவர், அதனை ஏற்குநருக்கு உடன் அடுத்துத் தொடர்புடையவர் ஆவார்; ஒரு கடனுறுதிச்சீட்டை, மாற்றுச்சீட்டை அல்லது காசோலையை எழுதுநர், செலுத்தப்படுநருக்கு உடன் அடுத்துத் தொடர்புடையவர் ஆவார்; மற்றும் மேற்குறிப்பெழுதுநர் தம் மேற்குறிப்புப் பெறுநருக்கு அவ்வாறு உடன் அடுத்துத் தொடர்புடையவர் ஆவார்; பிற கையொப்பமிடுபவர்கள் உடன்பாட்டின்மேல் கைக்கொண்டிருப்பவர் ஒருவருக்கு உடன் அடுத்துத் தொடர்புடையவர் ஆவார்.

**எடுத்துக்காட்டு**

"அ" என்பவர், "அ"-வின் ஆணையின் பேரில் 500 ரூபாய் செலுத்தத்தக்க ஒரு மாற்றுச்சீட்டை "ஆ" என்பவருக்கு வரைகிறார். அந்த மாற்றுச்சீட்டை "ஆ" ஏற்றுக்கொள்கிறார். ஆனால், பிந்தி அதைச் செலுத்தாமல் மதிப்பளிப்புச் செய்ய மறுத்துவிடுகிறார். அந்த மாற்றுச்சீட்டின் மேல் "ஆ" மீது "அ" வழக்கிடுகிறார். அது 400 ரூபாய் மதிப்புக்கு மட்டும் ஏற்றுக்கொள்ளப்பட்டது எனவும், மீதித்தொகை வாதிக்கு உதவி செய்ய வேண்டும் என்பதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்டது எனவும் "ஆ" மெய்ப்பிக்கிறார். "அ" 400 ரூபாய் மட்டுமே வசூல் செய்ய முடியும்.

45. ஒரு கடனுறுதிச்சீட்டில், மாற்றுச்சீட்டில் அல்லது காசோலையில் எதற்காக ஒரு நபர் கையொப்பமிட்டாரோ அந்த மறுபயனின் ஒரு பகுதியானது பணமாக இல்லாதிருந்தபோதிலும், துணை விசாரணையின்றிப் பணவகையில் உறுதி செய்யத்தக்கதாயிருந்து, அந்தப் பகுதி பயனற்றுப் போயிருக்குமிடத்து, அத்தகைய கையொப்பமிட்டவருக்கு உடன் அடுத்துத் தொடர்புடையவராகக் கைக்கொண்டிருப்பவர் அவரிடமிருந்து பெறுவதற்கு உரிமை கொண்ட பணத் தொகையானது விகிதப்படி குறைக்கப்படும்.

பணமாக இல்லாத மறுபயனின் ஒரு பயனின் ஒரு பகுதி பயனற்றுப் போதல்.

45(அ). ஒரு மாற்றுச் சீட்டானது அது கொடுபட வேண்டிய காலத்துக்கு முன்பாகத் தொலைந்து போயிருக்குமிடத்து, அதைக் கைக்கொண்டிருப்பவராகிய நபர், அதே சரிபகர்மான பிறிதொரு மாற்றுச்சீட்டைத் தமக்கு வழங்கும்படி வரைபவருக்கு விண்ணப்பிக்கலாம். ஆனால், தொலைந்து போனதாகச் சாட்டுரைக்கப்பட்ட அந்தக் காசோலை திரும்பவும் கண்டெடுக்கப்பட வேண்டிய நேர்வில், நபர்கள் அனைவருக்கும் எதிராக அதன் வரைபவர் தண்டத்தவிர்ப்புக்காக, வேண்டுறுத்தப்படுமாயின், பிணையம் கொடுத்தல் வேண்டும்.

தொலைந்து போன மாற்றுச்சீட்டின் இரட்டைப் படியினுக்குக் கைக்கொண் டிருப்பவருக் குள்ள உரிமை.

வரைபவர் மேற்சொன்னவாறு வேண்டுகோளின் மேல் இரட்டைப் படியைக் கொடுக்க மறுப்பாராயின் அதை அவர் கொடுக்க வேண்டுமெனக் கட்டாயப்படுத்தப்படலாம்.

## அத்தியாயம் IV

## ஆவணமாற்றுதல் பற்றியது

46. கடனுறுதிச்சீட்டை, மாற்றுச்சீட்டை அல்லது காசோலையை எழுதுவது, ஏற்றுக்கொள்வது அல்லது மேற்குறிப்பெழுதுவது என்பது, உள்ளபடியான அல்லது கொள்முறையான ஒப்படைப்பு வாயிலாக முழுமையாக்கப்படுகிறது.

ஒப்படைப்பு.

உடன் அடுத்துத் தொடர்புடைய தரப்பினர்களுக்கிடையே ஒப்படைப்பானது முழுப் பயன் உடையதாக இருக்க வேண்டுமானால், அந்த முறையாவணத்தை எழுதுகிற, ஏற்றுக்கொள்கிற அல்லது மேற்குறிப்பெழுதுகிற தரப்பினரால் அல்லது அதற்கென அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு நபரால் செய்யப்படுதல் வேண்டும்.

அத்தகைய தரப்பினர்களுக்கும், முறையாவணத்தை முறைப்படி கைக்கொண்டிருப்பவரல்லாத பிற கைக்கொண்டிருப்பவர் எவருக்குமிடையே, அந்த முறையாவணம் வரைக்கட்டின்மேல் அல்லது ஒரு தனிப்பட்ட நோக்கத்திற்காக மட்டுமே ஒப்படைக்கப்பட்டது என்றும், அதிலுள்ள சொத்தினை வரைக்கட்டின்றி, உரிமைமாற்றம் செய்யும் நோக்கத்திற்காக ஒப்படைக்கப்படவில்லை என்றும் காட்டப்படலாம்.

கொணர்பவருக்குச் செலுத்தத்தக்கதான ஒரு கடனுறுதிச்சீட்டு, மாற்றுச்சீட்டு அல்லது காசோலையானது அதன் ஒப்படைப்பு வாயிலாக மாற்றத்தக்கதாகும்.

ஆணையின்படி செலுத்தத்தக்க கடனுறுதிச்சீட்டு, மாற்றுச்சீட்டு அல்லது காசோலையானது, கைக்கொண்டிருப்பவரால் மேற்குறிப்பெழுதப்படுவதாலும் அது ஒப்படைக்கப்படுவதாலும் மாற்றத்தக்கதாகும்.

47. பிரிவு 58இன் வகையங்களுக்கு உட்பட்டு, கொணர்பவருக்குச் செலுத்தத்தக்க கடனுறுதிச்சீட்டு, மாற்றுச்சீட்டு அல்லது காசோலையானது அதன் ஒப்படைப்பு வாயிலாக மாற்றத்தக்கதாகும்.

ஒப்படைப்பு வாயிலாக ஆவண மாற்றுதல்.

விளக்கம்—ஒரு கடனுறுதிச்சீட்டு, மாற்றுச்சீட்டு அல்லது காசோலையானது, ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி, நிகழ்ந்தால் தவிர, செல்திறம் பெறுதல் ஆகாது, என்ற வரைக்கட்டின்பேரில், ஒப்படைக்கப்பட்ட அது, அந்த நிகழ்ச்சி நிகழ்ந்தாலன்றி, (அந்த வரைக்கட்டு பற்றிய அறிவிப்பில்லாமலும், தொகை மதிப்பிற்காகக் கைக்கொண்டிருப்பவரிடம் தவிர), மாற்றத்தக்கதாகாது.

### எடுத்துக்காட்டுகள்

(அ) கொணர்பவருக்குச் செலுத்தத்தக்க மாற்று முறையாவணத்தைக் கைக்கொண்டிருபவரான "அ" என்பவர் "ஆ" என்பவருக்காக, வைத்திருக்கும்படி அந்த ஆ-வின் முகவரிடம் அதை ஒப்படைக்கிறார். அந்த முறையாவணம் ஆவணமாற்றுதல் செய்யப்பட்டுவிட்டது.

(ஆ) "அ" என்பவருக்கும், அச்சமயத்தில் "ஆ" என்பவருக்கும் வங்கியராக உள்ளவரிடம் இருக்கிறதும், கொணர்பவர்க்குச் செலுத்தத்தக்கதுமான ஒரு மாற்று முறையாவணத்தை கைக்கொண்டிருப்பவரான "அ" அந்த வங்கியருக்கு அந்த முறையாவணத்தை அந்த வங்கியரிடம் இருக்கும் ஆ-வின் கணக்கில் ஆ-வின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்யும்படி பணிக்கிற வங்கியரும் அவ்வாறே செய்கிறார், மற்றும் அவ்வாறே இப்பொழுது "ஆ"வின் முகவராக அந்த முறையாவணத்தைத் தன் உடைமையில் வைத்திருக்கிறார். அந்த முறையாவணம் ஆவண மாற்றுதல் செய்யப்பட்டுவிட்டது. மற்றும் "ஆ" அதனைக் கைக்கொண்டிருப்பவராகிவிட்டார்.

மேற்குறிப்பின் வாயிலாக ஆவண மாற்றுதல்

48. பிரிவு 58இன் வகையங்களுக்கு உட்பட்டு, ஆணையின்படி செலுத்தத்தக்க ஒரு கடனுறுதிச்சீட்டு, மாற்றுச்சீட்டு அல்லது காசோலையானது, அதனைக் கைக்கொண்டிருப்பவரால் மேற்குறிப்பெழுதப்படுவதாலும் அது ஒப்படைக்கப்படுவதாலும் மாற்றத்தக்கதாகும்.

வெற்று மேற்குறிப்பினை முழு மேற்குறிப்பாக மாற்றுதல்.

49. வெற்று மேற்குறிப்போடு இருக்கும் ஒருமாற்று முறையாவணத்தைக் கைக்கொண்டிருப்பவர் தம் சொந்தப் பெயரைக் கையொப்பமிடாமல் பிற நபர் எவருக்காயினும் மேற்குறிப்புப் பெறுநர் என்ற முறையில் பணம் செலுத்தும்படி மேற்குறிப்பெழுதுநரின் கையொப்பத்திற்கு மேலே ஒரு பணிப்புரையை எழுதுவதன் வாயிலாக அந்த வெற்று மேற்குறிப்பை ஒரு முழு மேற்குறிப்பாக மாற்றலாம்; மற்றும் அதனால், அதைக் கைக்கொண்டிருப்பவர், ஒரு மேற்குறிப்பெழுதுநருக்குள்ள பொறுப்புகளை மேற்கொள்ள மாட்டார்.

மேற்குறிப்பின் விளைவு.

50. ஒரு மாற்றுமுறையாவணத்தை மேற்குறிப்பெழுதி ஒப்படைப்பதானது, அதிலுள்ள சொத்தினை மேற்கொண்டு ஆவணமாற்றுதல் செய்யும் உரிமையுடன் மேற்குறிப்புப் பெறுநருக்கு உரிமைமாற்றம் செய்துவிடுகிறது; ஆனால், மேற்குறிப்பானது வெளிப்படையான சொற்களால், அத்தகைய உரிமையைக் கட்டுப்படுத்தலாம் அல்லது விலக்கலாம் அல்லது அந்த முறையாவணத்தில் மேற்குறிப்பெழுதுவதற்காக அல்லது அதில் அடங்கியுள்ள தொகையை மேற்குறிப்பெழுதுநருக்காக அல்லது அதில் குறித்துரைக்கப்பட்ட பிற நபர் எவருக்காகவும் பெறுவதற்கு, அந்த மேற்குறிப்புப் பெறுநரை ஒரு முகவராக மட்டுமே அமர்த்தலாம்.

## எடுத்துக்காட்டுகள்.

"ஆ" என்பவர் கொணர்பவருக்குச் செலுத்த வேண்டுமென்ற வெவ்வேறு மாற்று முறையாவணங்களின்மேல் கீழ்க்கண்ட மேற்குறிப்புகளை எழுதிக் கையொப்பமிடுகிறார்:—

(அ) "இதில் அடங்கியுள்ள தொகையை "இ" என்பவருக்கு மட்டும் செலுத்தவும்",

(ஆ) "எனது பயனுக்காக "இ" என்பவருக்குச் செலுத்தவும்,"

(இ) "ஆ" என்பவரின் கணக்கிற்காக "இ" என்பவருக்கு அல்லது அவரது ஆணையின்படி செலுத்தவும்"

(ஈ) "இதில் உள்ள தொகையை "இ" என்பவரின் கணக்கில் வரவுவைத்தல் வேண்டும்."

"இந்த மேற்குறிப்புகள் "இ" மேற்கொண்டு ஆவண மாற்றுதல் செய்யும் உரிமையை விலக்குகின்றன."

(உ) "இ என்பவருக்குச் செலுத்தவும்."

(ஊ) "ஓரியண்டல் வங்கியோடு இருக்கும் கணக்கிலிருந்து இதன் மதிப்புத் தொகையை "இ"-க்குச் செலுத்தவும்."

(எ) "மேற்குறிப்பெழுதுநருக்கும் மற்றவர்களுக்கும் "இ" என்பவர் எழுதிக் கொடுத்த ஒரு குறிப்பிட்ட குறித்தளிப்பு ஒப்பாவணத்திலுள்ள மறுபயனின் பகுதியாக இருக்கிற, இதில் அடங்கியுள்ள தொகையை இ-க்குச் செலுத்தவும்,"

இந்த மேற்குறிப்புகள், "இ" மேற்கொண்டு ஆவண மாற்றுதல் செய்யும் உரிமையை விலக்கமாட்டா.

எவர் ஆவண மாற்றுதல் செய்யலாம்.

51. ஒரு மாற்றுமுறையாவணத்தின் தனித்த எழுதுநர், வரைபவர், செலுத்தப்படுநர் அல்லது மேற்குறிப்புப் பெறுநர் ஒவ்வொருவரும் அல்லது அதன் பல்வேறு கூட்டு எழுதுநர்கள், வரைபவர்கள், செலுத்தப்படுநர்கள் அல்லது மேற்குறிப்புப் பெறுநர்கள் அனைவரும், பிரிவு 50இல் குறிப்பிடப்பட்டவாறு, அத்தகைய முறையாவணத்தின் மாற்றுதற்குரிய தன்மை வரையப்படுத்தப்பட்டிராமல் அல்லது விலக்கப் பட்டிராமலிருப்பின், அதை மேற்குறிப்பெழுதி ஆவண மாற்றுதல் செய்யலாம்.

**விளக்கம்**—இந்தப் பிரிவிலுள்ள எதுவும், ஒரு முறையாவணத்தை எழுதுநரை அல்லது வரைபவரை அதனை அவர் சட்டப்படி உடைமையில் வைத்திருந்தாலன்றியும் அல்லது அதைக் கைக்கொண்டிருப்பவராக இருந்தாலன்றியும், அதில் மேற்குறிப்பெழுதி அல்லது ஆவணமாற்றுதல் செய்ய இயல்விக்காது; அல்லது ஒரு செலுத்தப்படுநரை அல்லது மேற்குறிப்புப்பெறுநரை அவர் அதனைக் கைக்கொண்டிருப்பவராக இருந்தாலன்றி, அதில் மேற்குறிப்பெழுத அல்லது ஆவண மாற்றுதல் செய்ய அவரை இயலவிக்காது.

**எடுத்துக்காட்டுகள்**

"அ" என்பவருக்கு அல்லது அவரது ஆணையின்படி செலுத்தத்தக்க ஒரு மாற்றுச்சீட்டு வரையப்படுகிறது. "அ" அதனை "ஆ"வுக்கு மேற்குறிப்பெழுதுகிறார்; அந்த மேற்குறிப்பு "அல்லது ஆணையின்படி" என்ற சொற்களை அல்லது அதற்குச் சமமான சொற்களைக் கொண்டிருக்கவில்லை எனினும், "அ" அந்த முறையாவணத்தை ஆவண மாற்றுதல் செய்யலாம்.

தமது சொந்தக் கடப்பாட்டை விலக்கிக் கொள்கிற அல்லது அதனை வரைக்கட்டுக்கு உள்ளாக்குகிற மேற்குறிப்பெழுதுநர்.

52. ஒரு மாற்று முறையாவணத்தின் மேற்குறிப்பெழுதுநர், அந்த மேற்குறிப்பில் வெளிப்படையான சொற்களின் வாயிலாக, அதன் மேலான தமது சொந்தக் கடப்பாட்டை விலக்கிக் கொள்ளலாம், அல்லது அத்தகைய கடப்பாடானது அல்லது அதன்மேல் கொடுபட வேண்டிய தொகையைப் பெறுவதற்கான மேற்குறிப்பெழுதப் பெறுநரின் உரிமையானது, ஒரு குறித்துரைக்கப்பட்ட நிகழ்ச்சி, அத்தகைய நிகழ்ச்சி ஒருபோதும் நிகழாது என்ற போதிலும் நிகழ்வதைச் சார்ந்திருக்குமாறு செய்யலாம்.

அவ்வாறு தமது கடப்பாட்டை விலக்கிக் கொள்கிற மேற்குறிப்பெழுதுநர் ஒருவர், பிற்பாடு அந்த முறையாவணத்தைக் கைக்கொண்டிருப்பவராக ஆகுமிடத்து, இடைநிலை மேற்குறிப்பெழுதுநர்கள் அனைவரும் அவருக்குக் கடப்பாடுடையவர்கள் ஆவர்.

**எடுத்துக்காட்டுகள்**

(அ) ஒரு மாற்று முறையாவணத்தின் மேற்குறிப்பெழுதுநர் "பின் தொடர்ச்சி இல்லாமல்" என்ற சொற்களைப் சேர்த்தெழுதித் தம் பெயரைக் கையொப்பமிடுகிறார்.

இந்த மேற்குறிப்பின்மேல், அவர் கடப்பாடு எதற்கும் ஆளாக மாட்டார்.

(ஆ) "அ" என்பவர் மாற்று முறையாவணத்தின் செலுத்தப்படுநராகவும், அதைக் கைக்கொண்டிருப்பவராகவும் இருக்கிறார். "பின்தொடர்ச்சி இல்லாமல்", என்ற ஒரு மேற்குறிப்பால், தமது சொந்தக் கடப்பாட்டை விலக்கிக் கொண்டு, அவர் அந்த முறையாவணத்தை "ஆ" என்பவருக்கு உரிமை மாற்றம் செய்கிறார் மற்றும் "ஆ" அதை "இ" என்பவருக்கு மேற்குறிப்பெழுதுகிறார். அந்த "இ" அதை "அ"வுக்கு மேற்குறிப்பெழுதுகிறார். "அ" தம்முடைய முந்திய உரிமைகளைப் பொறுத்து முன்னைய நிலையில் மறுபடியும் வைக்கப்படுவதோடல்லாமல் மேற்குறிப்பெழுதுநரின் உரிமைகளை "ஆ" மற்றும் "இ"-வுக்கு எதிராகப் பெற்றிருக்கிறார்.

முறைப்படி கைக்கொண்டிருப்பவரிடமிருந்து உரிமை மூலத்தை அடையப்பெறுகிற கைக் கொண்டிருப்பவர்.

53. முறைப்படி கைக்கொண்டிருப்பவரிடமிருந்து உரிமை மூலத்தை அடையப்பெற்ற ஒரு மாற்று முறையாவணத்தைக் கைக்கொண்டிருப்பவர், அதன்மேல் முறைப்படி கைக்கொண்டிருப்பவருக்குரிய உரிமைகளைக் கொண்டிருப்பார்.

வெற்று மேற்குறிப் பெழுதப்பட்ட முறையாவணம்.

54. குறுக்குக் கோடிட்ட காசோலைகளைப் பொறுத்து, இதன் பின்பு இதில் அடங்கியுள்ள வகையங்களுக்கு உட்பட்டு, வெற்று மேற்குறிப்பெழுதப்பட்டிருக்கிற ஒரு மாற்று முறையாவணம், அது முதன்முதலில் ஆணையின்படி செலுத்தத்தக்கதாக இருந்தபோதிலும், அதனைக் கொணர்பவருக்குச் செலுத்தத்தக்கதாகும்.

வெற்று மேற்குறிப்பினை முழு மேற்குறிப்பாக மாற்றுதல்.

55. ஒரு முறையாவணம் வெற்று மேற்குறிப்பெழுதப்பட்டிருப்பதன் பின்பு முழு மேற்குறிப்பாக அது மாற்றப்படுமாயின், அதற்குரிய தொகை முழுவதையும் மேற்குறிப்பெழுதுநரிடமிருந்து, எந்த நபருக்கு அது முழு மேற்குறிப்பெழுதப்பட்டிருக்கிறதோ அந்த நபரால் அல்லது அத்தகைய நபரின் வழியாக உரிமைமூலம் அடையப் பெற்றிருக்கிற ஒரு நபரால் தவிர, உரிமைக் கோரிக்கை செய்யப்பட முடியாது.

*கொடுபட வேண்டிய பணத் தொகையின் பகுதிக்கான மேற்குறிப்பு.*

56. ஆவண மாற்றுதல் நோக்கத்திற்காக ஒரு மாற்று முறையாவணத்தின் மேல் எழுத்தப்பட்ட எதுவும், அந்த முறையாவணத்தின் மேல் கொடுபட வேண்டியதாகத் தோன்றுகிற தொகையின் ஒரு பகுதியை மட்டுமே உரிமை மாற்றம் செய்வதாக அவ்வாறு எழுதப்பட்டது புலப்படுத்துமாயின், செல்லாததாகும். ஆனால், அத்தகைய தொகையின் ஒரு பகுதி செலுத்தப்பட்டிருக்குமிடத்து, அந்த முறையாவணத்தின் மேல், அந்தப்படிக்கான குறிப்பு ஒன்று மேற்குறிப்பெழுதப்படலாம்; அதன் பின்பு மீதித் தொகைக்காக அது ஆவண மாற்றுதல் செய்யப்படலாம்.

*சட்டச் சார்பாற்றுநர், இறந்து போனவரால் மேற்குறிப் பெழுதப்பட்ட ஒரு முறை யாவணத்தை ஒப்படைப்பதன் வாயிலாக மட்டுமே ஆவண மாற்றுதல் செய்ய முடியாது.*

57. இறந்துபோன ஒருவரின் சட்டச் சார்பாற்றுநர் ஆணையின்படி செலுத்தத்தக்கதாயும், இறந்து போனவரால் மேற்குறிப்பெழுதப்பட்டு, ஆனால் ஒப்படைக்கப்படாததுமான ஒரு கடனுறுதிச் சீட்டு, மாற்றுச்சீட்டு அல்லது காசோலையை, ஒப்படைப்பதன் வாயிலாக மட்டுமே ஆவண மாற்றுதல் செய்ய முடியாது.

*சட்டமுரணான வழிவகை வாயிலாக அல்லது சட்டமுரணான மறு பயனுக்காகப் பெறப்பட்ட முறையாவணம்.*

58. ஒரு மாற்று முறையாவணம் தொலைந்து போனபோது அல்லது அதனை, எழுதுநர், ஏற்குநர் அல்லது கைக்கொண்டிருப்பவரிடமிருந்து ஒரு குற்றச் செயல் அல்லது, மோசடியான வழிவகை வாயிலாக அல்லது ஒரு சட்ட முரணான மறுபயனுக்காகப் பெறப்பட்டபோது, அந்த முறையாவணத்தைக் கண்டெடுத்த அல்லது அவ்வாறு பெற்ற நபரின் வழியாக உரிமைக் கோரிக்கை செய்கிற உடைமையாளர் அல்லது மேற்குறிப்புப் பெறுநர் எவரும், அத்தகைய எழுதுநர், ஏற்குநர், அல்லது கைக்கொண்டிருப்பவரிடமிருந்தும் அல்லது அத்தகைய கைக்கொண்டிருப்பவருக்கு முந்திய தரப்பினர் எவரிடமிருந்தும் அத்தகைய உடைமையாளர் அல்லது மேற்குறிப்புப் பெறுநர் அல்லது எந்த நபரின் வழியாக அவர் உரிமை கோரிக்கை செய்கிறாரோ அந்த நபர், அதனை முறைப்படி கைக்கொண்டிருப்பவராக இருந்தாலன்றி, அதன்மேல் கொடுபட வேண்டிய அந்தத் தொகையைப் பெறுவதற்கு உரிமைக் கொண்டவர் ஆகார்.

*மதிப்பு மறுக்கப் பட்டதன் அல்லது காலங் கடந்ததன் பின்பு பெறப்பட்ட முறையாவணம்.*

59. ஒரு மாற்று முறையாவணம், ஏற்கப்படாமையாயினும் அல்லது பணம் செலுத்தப்படாமையாயினும் மதிப்பு மறுக்கப்பட்டதன் பின்பு, அதுபற்றிய அறிவிப்பு அல்லது முதிர்வுக் காலத்திற்குப் பின்பு, அதனைப் பெற்றுள்ள கைக்கொண்டிருப்பவர் அதைத் தமக்கு உரிமை மாற்றம் செய்குநர் அதன்மேல் பெற்றிருக்கும் உரிமைகளை மட்டுமே பிற தரப்பினர்களுக்கு எதிராகக் கொண்டிருப்பார்;

*உதவுவதற்காக எழுதப்பட்ட கடனுறுதிச் சீட்டு அல்லது மாற்றுச்சீட்டு.*

*வரம்புரையாக*—மறுபயன் இல்லாமல் தரப்பினர் எவரையும் பணம் பெறுவதற்காக இயல்விக்கும் நோக்கத்திற்காக எழுதப்பட்ட, வரையப்பட்ட அல்லது ஏற்கப்பட்ட ஒரு கடனுறுதிச் சீட்டை அல்லது மாற்றுச் சீட்டை அது முதிர்வுக் காலத்திற்குப் பின்பு நல்லெண்ணத்தோடும், மறுபயனுக்காகவும் அதைக் கைக்கொண்டிருப்பவராக ஆகிற நபர் எவரும், அந்தக் கடனுறுதிச் சீட்டின் அல்லது மாற்றுச் சீட்டின் தொகையை, முந்திய தரப்பினர் எவரிடமிருந்தும் வசூல் செய்து கொள்ளலாம்.

### எடுத்துக்காட்டு

மாற்றுச்சீட்டு ஒன்றை ஏற்குநர், அதை அவர் ஏற்றுக் கொண்டபோது, அந்த மாற்றுச் சீட்டுக்குப் பணம் செலுத்துவதற்கு ஒரு துணைப் பிணயமாகச் சிலவகை சரக்குகளை, அந்த மாற்றுச் சீட்டின் முதிர்வுக் காலத்தின்போது செலுத்தப்படாதிருக்குமாயின் அந்தச் சரக்குகளை விற்று அதன் விற்று முதலை அந்த மாற்றுச் சீட்டைத் தீர்ப்பதற்காகப் பயன்படுத்திக் கொள்ள வரைபவருக்கு அதிகாரமளித்து வரைபவரிடம் வைப்பீடு செய்தார். அந்த மாற்றுச் சீட்டின் முதிர்வுக் காலத்தில் பணம் செலுத்தப்படாமையால், வரைபவர் அந்த சரக்குகளை விற்று அந்த விற்று முதலைத் தாமே நிறுத்தி வைத்துக் கொண்டார். ஆனால், மாற்றுச்சீட்டினை "அ" என்பவருக்கு மேற்குறிப்பெழுதிக் கொடுத்துவிடுகிறார். "அ"வின் உரிமை மூலமானது, வரைபவரின் உரிமை மூலத்தைப் போன்று அதே மதிப்பீட்டிற்கு உட்பட்டதாகும்.

60. ஒரு மாற்று முறையாவணம், அதை எழுதுநரால், வரைபவரால் அல்லது ஏற்குநரால், அதன் முதிர்வுக் காலத்தில் அல்லது அதன் பின்பு, அதற்காகப் பணம் செலுத்தப்படும் அல்லது தீர்க்கப்படும் வரையில், (அது முதிர்வுக் காலத்திற்குப் பின்பு, எழுதுநரால், வரைபவரால் அல்லது ஏற்குநரால் தவிர) ஆவண மாற்றுதல் செய்யப்படலாம்; ஆனால், அத்தகைய செலுத்துகை அல்லது தீர்த்தலுக்குப் பின்பு அல்ல.

பணம் செலுத்தப்படும் அல்லது தீர்க்கப்படும் வரை மாற்றத்தக்க முறையாவணம்.

## அத்தியாயம் V

## காட்டிக் கேட்டல் பற்றியது

61. காட்டிய பின்பு செலுத்தத்தக்க ஒரு மாற்றுச் சீட்டானது காட்டிக் கேட்பதற்கான ஒரு காலம் அல்லது இடம் எதுவும் இதில் குறித்துரைக்கப்படாதிருக்குமாயின், அதை ஏற்குமாறு கோருவதற்கு உரிமைக் கொண்ட நபர் ஒருவரால் ஏற்றுக் கொள்ளப்படுவதற்காக அதனை வரைபவர் தகுமான தேடுகைக்குப் பின்பு, கண்டுபிடிக்கப்பட முடியுமாயின், அது வரையப்பட்ட பின்பு ஒரு தகுமான காலத்திற்குள்ளும், ஓர் அலுவல் நாளில் அலுவல் நேரத்திலும் அந்த வரைபவரிடம் காட்டிக் கேட்கப்படுதல் வேண்டும். அவ்வாறு காட்டிக் கேட்கத் தவறுகையில், அத்தகைய தவறுகையைச் செய்யும் நபருக்கு அதன் தரப்பினர் எவரும் அதன்மேல் கட்டுப்பாடுடையவர் ஆகார்.

ஏற்புக்காகக் காட்டிக் கேட்டல்.

தகுமான தேடுகைக்குப் பின்பு, வரைபவர் கண்டுபிடிக்கப்பட முடியாதிருப்பாராயின், அந்த மாற்றுச் சீட்டானது மதிப்பு மறுக்கப்படுகிறது.

அந்த மாற்றுச் சீட்டு குறிப்பிட்ட இடத்தில் இருக்கிற வரைபவருக்கு அனுப்புமாறு பணிக்கப்படுமாயின், அது அந்த இடத்தில் காட்டிக் கேட்கப்படுதல் வேண்டும்; காட்டிக் கேட்பதற்குரிய தேதியில், தகுமான தேடுகைக்குப் பின்பு, அவர் கண்டுபிடிக்கப்பட முடியாதிருப்பாராயின், அந்த மாற்றுச் சீட்டு மதிப்பு மறுக்கப்படுகிறது.

உடன்பாட்டின் அல்லது வழக்காற்றின் வாயிலாக அதிகாரமளிக்கப்பட்டிருக்குமிடத்து, அஞ்சல் நிலையத்தின் வழியாக ஒரு பதிவுக் கடிதம் வாயிலாக காட்டிக்கேட்டல் போதுமானதாகும்.

62. காட்டிய பின்பு ஒரு குறிப்பிட்ட கால அளவில், செலுத்தப்படத்தக்க ஒரு கடனுறுதிச் சீட்டானது, அதை எழுதுநர் காண்பதற்காக (தகுமான தேடுகைக்குப் பின்பு அவர் கண்டுபிடிக்கப்படுவாராயின்), அந்தத் தொகை செலுத்தப்படுமாறு கோருவதற்கு உரிமைகொண்டவரால், அது எழுதப்பட்ட பின்பு ஒரு தகுமான காலத்திற்குள்ளும், ஓர் அலுவல் நாளில் அலுவல் நேரத்திலும் அவரிடம் காட்டிக் கேட்கப்படுதல் வேண்டும். அவ்வாறு காட்டிக் கேட்கத் தவறுகையில், அத்தகைய தவறுகையைச் செய்யும் நபருக்கு, அதன் தரப்பினர் எவரும் அதன் பேரில் கடப்பாடுடையவர் ஆகார்.

காண்பதற்காக கடனுறுதிச் சீட்டைக் காட்டிக் கேட்டல்.

63. ஏற்பதற்காகத் தம்மிடம் காட்டிக் கேட்கப்பட்ட மாற்றுச் சீட்டு ஒன்றின் வரைபவரால் அவ்வாறு வேண்டுறுத்தப்படுவாராயின், அவர் அதனை ஏற்பாரா என்பதை ஆழ்ந்தாராய்ந்து முடிவு செய்வதற்காக, அதனைக் கைக்கொண்டிருப்பவர், வரைபவருக்குப் (பொது விடுமுறை நாட்கள் நீங்கலாக) நாற்பத்தெட்டு மணி நேரம் அனுமதித்தல் வேண்டும்.

ஆழ்ந்தாராய்ந்து முடிவு செய்ய வரைபவருக்குள்ள காலம்.

64. கடனுறுதிச் சீட்டுகள், மாற்றுச் சீட்டுகள், மற்றும் காசோலைகள் அவற்றிற்குரிய பணம் செலுத்தப்படுவதற்காக முறையே அவற்றை எழுதுநருக்கு, ஏற்குநருக்கு அல்லது வரைபவருக்கு அதைக் கைக்கொண்டிருப்பவரால் அல்லது அவர் சார்பாக இதன் பின்பு வகை செய்யப்பட்டவாறு காட்டிக் கேட்கப்படுதல் வேண்டும், அவ்வாறு காட்டிக் கேட்கத் தவறுகையில், அதற்குரிய பிற தரப்பினர்கள் அத்தகைய கைக்கொண்டிருப்பவருக்கு அதன்பேரில் கடப்பாடுடையவர் ஆகார்.

செலுத்துகைக் காகக் காட்டிக் கேட்டல்.

உடன்பாட்டின் அல்லது வழக்காற்றின் வாயிலாக அதிகாரமளிக்கப்பட்டிருக்குமிடத்து, அஞ்சல் நிலையத்தின் வழியாக, ஒரு பதிவுக் கடிதம் வாயிலாகக் காட்டிக் கேட்டல் போதுமானதாகும்.

**விலக்கு.**—ஒரு கடனுறுதிச் சீட்டானது கோரியவுடன் செலுத்தத்தக்கதாகவும் ஆனால், ஒரு குறித்துரைக்கப்பட்ட இடத்தில் செலுத்தத்தக்கதாக இல்லாததாகவும் இருக்குமிடத்து, அதன் எழுதுநர் மீது பொறுப்பு சுமத்துவதன் பொருட்டு, காட்டிக் கேட்டல் எதுவும் தேவை இல்லை.

காட்டிக் கேட்பதற்கான நேரங்கள்.

65. பணச் செலுத்துகைக்கான காட்டிக் கேட்டல், வழக்கமான அலுவல் நேரங்களிலும், அது ஒரு வங்கியரிடமாயின், வங்கி அலுவல் நேரங்களிலும் செய்யப்படுதல் வேண்டும்.

முறையாவணத்தின் தேதிக்கு அல்லது காட்டியபின்பு செலுத்தத்தக்க அதன் செலுத்துகைக்காக காட்டிக் கேட்டல்.

66. குறித்துரைக்கப்பட்ட கால அளவில் செலுத்தத்தக்கது என்று எழுதப்பட்ட ஒரு கடனுறுதிச் சீட்டு அல்லது மாற்றுச் சீட்டு அதன் தேதிக்கு அல்லது காட்டிய பின்பு பணச் செலுத்துகைக்காக முதிர்வுக் காலத்தில் காட்டிக் கேட்கப்படுதல் வேண்டும்.

தவணைகளில் செலுத்தத்தக்க கடனுறுதிச் சீட்டின் செலுத்துகைக்காகக் காட்டிக் கேட்டல்.

67. தவணைகளில் செலுத்தத்தக்க கடனுறுதிச் சீட்டானது, ஒவ்வொரு தவணையின் செலுத்துகைக்காக நிருணயிக்கப்பட்ட தேதிக்குப் பின்பு மூன்றாம் நாளன்று, பணச் செலுத்துகைக்காக காட்டிக் கேட்கப்படுதல் வேண்டும்; மற்றும், அவ்வாறு காட்டிக்கேட்கப்படுவதன்மேல், செலுத்தப்படாமையானது ஒரு கடனுறுதிச் சீட்டின் முதிர்வுக்காலத்தில் செலுத்தப்படாமைக்குள்ள அதை செல்திறம் உடையதாகும்.

குறித்துரைக்கப்பட்ட இடத்தில் செலுத்தத்தக்கதாகவும், பிற இடம் எதிலும் செலுத்தத் தக்கதல்லாதாகவும் உள்ள முறை யாவணத்தைக் காட்டிக் கேட்டல்.

68. ஒரு குறித்துரைக்கப்பட்ட இடத்தில் செலுத்தத்தக்கதாகவும், பிற இடம் எதிலும் செலுத்தத்தக்கதல்லாததாகவும் எழுதப்பட்ட, வரையப்பட்ட, ஏற்கப்பட்ட ஒரு கடனுறுதிச்சீட்டு, மாற்றுச் சீட்டு அல்லது காசோலையானது, அதற்குரிய தரப்பினர்கள் எவர்மீதும் பொறுப்புச் சுமத்துவதன் பொருட்டுப் பணச் செலுத்துகைக்காக அந்த இடத்திலேயே காட்டிக் கேட்கப்படுதல் வேண்டும்.

குறித்துரைக்கப்பட்ட இடத்தில் செலுத்தத்தக்க முறையாவணம்.

69. ஒரு குறித்துரைக்கப்பட்ட இடத்தில், செலுத்தத்தக்கதாக எழுதப்பட்ட வரையப்பட்ட, அல்லது ஏற்கப்பட்ட ஒரு கடனுறுதிச்சீட்டு அல்லது மாற்றுச்சீட்டு அதனை எழுதுநர் அல்லது வரைபவர் மீது பொறுப்புச் சுமத்துவதன் பொருட்டு அதே இடத்தில் பணச் செலுத்துகைக்காகக் காட்டிக் கேட்கப்படுதல் வேண்டும்.

தனிப்பட்ட இடம் எதுவும் குறித்துரைக்கப் படாதவிடத்துக் காட்டிக் கேட்டல்.

70. பிரிவுகள் 68 மற்றும் 69-இல் சொல்லப்பட்டவாறு செலுத்தத்தக்கதாக எழுதப்படாத ஒரு கடனுறுதிச்சீட்டு அல்லது மாற்றுச்சீட்டு, அதை எழுதுநருடைய, வரைபவருடைய அல்லது ஏற்குநருடைய அலுவல் இடம் (ஏதேனுமிருப்பின்), அந்த இடத்தில் அல்லது, நேர்வுக்கேற்ப, அவரது வழக்கமான குடியிருப்பிடத்தில் பணச்செலுத்தைக்காகக் காட்டிக் கேட்கப்படுதல் வேண்டும்.

எழுதுநர் முதலானோர் அறியப்பட்ட அலுவலிடம் அல்லது குடியிருப்பிடம் எதையும் கொண்டிராத போது காட்டிக் கேட்டல்.

71. மாற்று முறையாவணத்தை எழுதுநர், வரைபவர் அல்லது ஏற்குநர் அறியப்பட்ட அலுவலிடம் அல்லது நிலையான குடியிருப்பிடம் எதையும் கொண்டிராதிருப்பாராயின், மற்றும் ஏற்புக்காக அல்லது பணச் செலுத்துகைக்காகக் காட்டிக் கேட்கப்படுவதற்கு இடம் எதுவும் அந்த முறையாவணத்தில் குறித்துரைக்கப்படாதிருக்குமாயின், அவர் எங்கே காணப்பட்டாலும் அங்கு அவரிடம் நேரில் அத்தகைய காட்டிக் கேட்டல் செய்யப்படலாம்.

வரைபவர் மீது பொறுப்புச் சுமத்துவதற்காகக் காசோலையைக் காட்டிக் கேட்டல்.

72. பிரிவு 84-இன் வகையங்களுக்கு உட்பட்டு ஒரு காசோலையானது வரைபவர் மீது பொறுப்புச் சுமத்துவதன் பொருட்டு அது எந்த வங்கிக்கு வரையப்பட்டிருக்கிறதோ அந்த வங்கியில் வரைபவருக்கும் அவருடைய வங்கிக்கும் இடையே உள்ள தொடர்பானது வரைபவருக்கு ஊறு விளைவிக்கும் வகையில் மாற்றுகை செய்யப்பட்டிருப்பதற்கு முன்பே காட்டிக் கேட்கப்படுதல் வேண்டும்.

73. ஒரு காசோலையானது, அதை வரைபவர் தவிர, நபர் எவர் மீதும் பொறுப்புச் சுமத்துவதன் பொருட்டு அத்தகைய நபரால் அது ஒப்படைக்கப்பட்ட பின்பு தகுமான காலத்திற்குள் காட்டிக் கேட்கப்படுதல் வேண்டும்.

பிற ஆள் எவர் மீதும் பொறுப்புச் சுமத்துவதற்காகக் காசோலையைக் காட்டிக் கேட்டல்.

74. பிரிவு 31-இன் வகையங்களுக்கு உட்பட்டு, கோரியவுடன், செலுத்தத்தக்க ஒரு முறையாவணம், பணச்செலுத்துகைக்காகக் கைக்கொண்டிருப்பவரால் அது பெறப்பட்ட பின்பு, தகுமான காலத்திற்குள் காட்டிக் கேட்கப்படுதல் வேண்டும்.

கோரியவுடன் செலுத்தத்தக்க முறையாவணத்தைக் காட்டிக் கேட்டல்

75. நேர்வுக்கேற்ப, வரைபவரின், எழுதுநரின், அல்லது ஏற்குநரின் உரியவாறு அதிகாரமளிக்கப்பட்ட முகவரிடம் அல்லது வரைபவர், எழுதுநர் அல்லது ஏற்குநர் இறந்துபோயிருக்குமிடத்து, அவருடைய சட்டச் சார்பாற்றுநரிடம் அல்லது அவர் நொடித்துப்போனவராகி விட்டார் என்று விளம்பப்பட்டிருக்குமிடத்து, அவருடைய உரிமையளிக்கப்படுநரிடம் ஏற்புக்காக அல்லது பணச்செலுத்துகைக்காகக் காட்டிக் கேட்கப்படலாம்.

முகவரால் இறந்து போனவரின் சார்பாற்றுநரால் அல்லது நொடித்துப் போனவரின் உரிமையளிக்கப் படுநரால் அல்லது அவர்களிடம் காட்டிக் கேட்கப்படுதல்.

75. (அ) காலத்தாழ்வானது கைக்கொண்டிருப்பவரது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சூழ்நிலைகளில் ஏற்பட்டிருந்து அவரது தவறுகையால், தவறான நடத்தையால் அல்லது கவனக் குறைவால் ஏற்பட்டது எனப் பழிசாட்ட முடியாததாக இருக்குமாயின், ஏற்புக்காக அல்லது செலுத்துகைக்காகக் காட்டிக் கேட்பதிலான காலத்தாழ்வானது மன்னிக்கப்படும். காலத்தாழ்விற்கான காரணம் செயற்படுதல் அற்றுப்போகும்போது, தகுமான காலத்திற்குள் காட்டிக் கேட்டல் செய்யப்படுதல் வேண்டும்.

ஏற்புக்காக அல்லது செலுத்துகைக்காகக் காட்டிக் கேட்பதிலான காலத் தாழ்வினை மன்னித்தல்.

76. கீழ்க்கண்ட நேர்வுகளில் எவற்றிலும், செலுத்துகைக்காகக் காட்டிக் கேட்டல் எதுவும் தேவையில்லை மற்றும் முறையாவணம் காட்டிக் கேட்கப்படுவதற்கான உரிய தேதியில் மதிப்பு மறுக்கப்பட்டதாகும்:—

எப்போது காட்டிக் கேட்டல் தேவையில்லை.

(அ) எழுதுநர், வரைபவர் அல்லது ஏற்குநர் வேண்டுமென்றே முறையாவணத்தைக் காட்டிக் கேட்பதைத் தடுப்பாராயின், அல்லது

அந்த முறையாவணம், அவரது அலுவலிடத்தில் செலுத்தத்தக்கதாயிருந்து அத்தகைய ஓர் அலுவல் நாளில் வழக்கமான அலுவல் நேரங்களின் போது அவர் மூடி விட்டிருப்பாராயின், அல்லது

அந்த முறையாவணம், ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட பிற இடத்தில் செலுத்தத்தக்கதாயிருந்து, அவர் அல்லது அதைச் செலுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட நபர் எவரும், அந்த இடத்தில், வழக்கமான அலுவல் நேரங்களில் வராதிருப்பாராயின், அல்லது

அந்த முறையாவணம் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட இடத்தில் செலுத்தத்தக்கதாக இருந்து உரியவ்வாறு தேடிய பின்பும் அவர் காணப்பட முடியாதிருப்பாராயின்;

(ஆ) அதற்குப் பொறுப்புச் சுமத்துவதற்கு நாடப்பட்ட தரப்பினர் எவருக்கும் எதிராக, காட்டிக் கேட்கப்படாதிருந்த போதிலும், பணம் செலுத்துவதற்கு அவர் ஏற்றுக் கொண்டிருப்பாராயின்;

(இ) தரப்பினர் எவருக்கும் எதிராக—

முதிர்வுக் காலத்திற்குப் பின்பு, முறையாவணம் காட்டிக் கேட்கப்பட்டிருக்கவில்லை என்று அறிந்திருந்தே—அந்த முறையாவணத்தின் மேல் கொடுபட வேண்டிய தொகை வகையில் ஒரு பகுதியை அவர் செலுத்துவாராயின், அல்லது அதன்மேல் கொடுபட வேண்டிய தொகையை முழுவதுமாகவோ, பகுதியாகவோ செலுத்த உறுதியுரைப்பாராயின், அல்லது

பணச் செலுத்துகைக்காகக் காட்டிக் கேட்பதில் ஏற்பட்ட ஏதேனும் தவறுகையைத் தமக்கு நன்மையாக எடுத்துக்கொள்ளும் அல்லது தமது உரிமையைப் பிறவாறாக விட்டுக் கொடுப்பாராயின்;

(ஈ) வரைபவருக்கு எதிராக, அத்தகைய காட்டிக் கேட்டலின் தேவையிலிருந்தான எந்த வகையான இழப்புக்கும் அந்த வரைபவர் ஆளாகக் கூடியவராகார் எனில்.

செலுத்துகைக் காகக் காட்டிக் கேட்கப்பட்ட மாற்றுச் சீட்டில் கவனக் குறைவாக நடவடிக்கை மேற்கொள்ளும் வங்கியரது கடப்பாடு.

77. குறித்துரைக்கப்பட்ட வங்கியில் பணம் செலுத்தத்தக்கதாக மாற்றுச் சீட்டு ஒன்று ஏற்றுக்கொள்ளப்பட்டு, பணச் செலுத்தகைக்காக உரியவாறு அங்கே காட்டிக் கேட்கப்பட்டு, மதிப்பு மறுக்கப்பட்டிருக்கும்போது, கைக்கொண்டிருப்பவருக்கு இழப்பு ஏற்படும் வகையில், அத்தகைய மாற்றுச்சீட்டை அந்த வங்கியர் கவனக்குறைவாக அல்லது முறையற்ற வகையில் வைத்திருப்பாராயின், அதில் நடவடிக்கை மேற்கொள்வாராயின், அல்லது அதைத் திருப்பி ஒப்படைப்பாராயின், அதைக் கைக்கொண்டிருப்பவருக்கு அந்த இழப்பிற்காக அவர் சரியீடு செய்தல் வேண்டும்.

## அத்தியாயம் VI

## செலுத்துகை மற்றும் வட்டியைப் பற்றியது

பணம் எவருக்குச் செலுத்தப்பட வேண்டும்.

78. பிரிவு 82-இன் கூறு (இ) - இன் வகையங்களுக்கு உட்பட்டு, கடனுறுதிச் சீட்டு, மாற்றுச்சீட்டு அல்லது காசோலையின் மேல் கொடுபட வேண்டிய தொகையின் செலுத்தமானது, அதனை எழுதுநர் அல்லது ஏற்குநரை விடுவிப்பதன் பொருட்டு, அந்த முறையாவணத்தைக் கைக்கொண்டிருப்பவரிடம் செய்யப்படுதல் வேண்டும்.

வீதம் குறித்துரைக்கப் பட்டிருக்கும்போது வட்டி.

79. கடனுறுதிச்சீட்டின் அல்லது மாற்றுச்சீட்டின் மேல், குறித்துரைக்கப்பட்ட வீதத்தில் வட்டி செலுத்தப்பட வேண்டும் என வெளிப்படையாக எழுதப்படுகிறபோது, அதன்மேல் கொடுபட வேண்டிய முதலாகவுள்ள பணத்தொகையின்மேல், அந்த முறையாவணத்தின் தேதியிலிருந்து, அத்தகைய தொகையைச் செலுத்த முற்படுகிற வரையில் அல்லது அது தண்டல் செய்யப்படும் வரையில் அல்லது அத்தகைய தொகை தண்டல் செய்யப்படுவதற்காக உரிமைவழக்கு தொடரப்பட்ட பின்பு, நீதிமன்றம் பணிக்கிற தேதி வரையில், அந்த வட்டியானது, குறித்துரைக்கப்பட்ட வீதத்தில் கணக்கிடப்படுதல் வேண்டும்.

வீதம் எதுவும் குறித்துரைக் கப்படடிராத போது வட்டி.

80. முறையாவணத்தில் வட்டி வீதம் எதுவும், குறித்துரைக்கப்பட்டிராதபோது, அதன்மேல், கொடுபட வேண்டிய தொகைக்கான வட்டியானது, அந்த முறையாவணத்தின் தரப்பினர் எவருக்குமிடையே வட்டி தொடர்பாக உடன்பாடு எதுவும் இருந்தபோதிலும், அந்தத் தொகையைச் செலுத்துவதற்குப் பொறுப்புச் சுமத்தப்பட்ட தரப்பினரால், எந்தத் தேதியில் அது செலுத்தப்பட்டிருக்க வேண்டுமோ அந்தத் தேதியில், அதன்மேல் அது தண்டல் செய்யப்படும் வரையில், அல்லது அத்தகைய தொகை தண்டல் செய்யப்படுவதற்காக ஓர் உரிமை வழக்கு தொடரப்பட்ட பின்பு, நீதிமன்றம் பணிக்கிற தேதி வரையில், ஆண்டொன்றுக்கு ஆறு விழுக்காடாகக் கணக்கிடப்படுதல் வேண்டும்.

**விளக்கம்.**—பொறுப்புச் சுமத்தப்பட்ட தரப்பினர், செலுத்தப்படாமையால் மதிப்பு மறுக்கப்பட்ட மாற்று முறையாவணத்தின் மேற்குறிப்பெழுதுநராக இருக்கும்போது, மதிப்பு மறுக்கப்பட்டது பற்றிய அறிவிப்பை அவர் பெறுகிற காலத்திலிருந்து மட்டுமே வட்டி செலுத்தக் கடப்பாடுடையவர் ஆவார்.

செலுத்துகையின் பேரில் முறையாவணத்தை ஒப்படைத்தல் அல்லது தொலைந்து விட்ட நேர்வில் ஈட்டுறுதி.

81. கடனுறுதிச் சீட்டு, மாற்றுச்சீட்டு, அல்லது காசோலையின் மேல் கொடுபட வேண்டிய தொகையைச் செலுத்தும் கடப்பாடுடையவரும் அதைக் கைக்கொண்டிருப்பவரால் பணம் செலுத்தும்படி கோரப்படுகிறவருமான நபர் எவரும், அந்தப் பணத்தைச் செலுத்துவதற்கு முன்பு அது காட்டப்படுவதற்கும் உரிமை கொண்டவர் ஆவார்; மேலும், செலுத்துகையின் பேரில், அது, அவரிடம் ஒப்படைக்கப்படுவதற்கும் அல்லது அந்த முறையாவணம் தொலைந்திருக்கிறது அல்லது அது முன்னிலைப்படுத்தப்பட முடியாதிருக்குமாயின், அவருக்கு எதிராக அதன்மேல் ஏற்படக்கூடிய மேலுமான உரிமைக் கோரிக்கை எதற்கும் எதிராக அவர் ஈட்டுறுதியளிக்கப்படுவதற்கு உரிமை கொண்டவர் ஆவார்.

## அத்தியாயம் VII

## கடனுறுதிச் சீட்டுகள், மாற்றுச்சீட்டுகள் மற்றும் காசோலைகள் மேலான கடப்பாட்டிலிருந்து விடுவித்தல் பற்றியது

82. முறையாவணத்தை எழுதுநர், ஏற்குநர் அல்லது அதில் மேற்குறிப்பெழுதுநர் முறையே— கடப்பாட்டிலிருந்து விடுவித்தல்.

(அ) அந்த ஏற்குநரின் அல்லது மேற்குறிப்பெழுதுநரின் பெயரை, அவரை விடுவிக்கும் உட்கருத்தோடு அறவு செய்கிறவரான அதனைக் கைக்கொண்டிருப்பவர் மற்றும் அந்தக் கைக்கொண்டிருப்பவரின்கீழ் உரிமைகோரும் தரப்பினர்கள் அனைவருக்கும் அதன் பேரில் தமக்குள்ள கடப்பாட்டிலிருந்து, விடுவிக்கப்பெறுவார். அறவு செய்வதன் வாயிலாக.

(ஆ) அந்த எழுதுநர், ஏற்குநர் அல்லது அதில் மேற்குறிப்பெழுதுநரைப் பிறவாறாக விடுவிக்கின்றவரான அதனைக் கைக்கொண்டிருப்பவர் மற்றும் அத்தகைய விடுவிப்புக்கான அறிவிப்புக்குப் பின்பு அத்தகைய கைக்கொண்டிருப்பவரின்கீழ் உரிமைமூலம் அடையப்பெறுகிற தரப்பினர்கள் அனைவருக்கும் அதன்பேரில் தமக்குள்ள கடப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பெறுவார். விடுவித்தல் வாயிலாக.

(இ) அந்த முறையாவணம் கொணர்பவருக்குச் செலுத்தத்தக்கதாகவோ அல்லது வெற்று மேற்குறிப்பெழுதப்பட்டோ இருந்து, மற்றும் அத்தகைய எழுதுநர், ஏற்குநர் அல்லது மேற்குறிப்பெழுதுநர் அதன்பேரில் கொடுபட வேண்டிய தொகையை முறைப்படி செலுத்துவாராயின், அதற்குரிய தரப்பினர்கள் அனைவருக்கும் அதன்மேல் தமக்குள்ள கடப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பெறுவார். செலுத்துகையின் வாயிலாக.

83. மாற்றுச்சீட்டைக் கைக்கொண்டிருப்பவர், எழுதுநர் அதைத் தான் ஏற்க வேண்டுமா என்பதைக் கருதுகை செய்வதற்காக, அவருக்குப் பொது விடுமுறை நாட்கள் நீங்கலாக, நாற்பத்தெட்டு மணி நேரத்திற்கும் அதிகமான நேரத்திற்கு மேல் அனுமதிப்பாராயின், அவ்வாறு அனுமதிப்பதற்கு இசைவளிக்காத முந்திய தரப்பினர்கள் அனைவரும், அத்தகைய கைக்கொண்டிருப்பவருக்கு, அதன்மேல் தமக்குள்ள கடப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பெறுவார். ஏற்பதற்கு நாற்பத்தெட்டு மணி நேரத்திற்கும் அதிகமான நேரத்திற்கு மேல் வரைபவரை அனுமதிப்பதன் வாயிலாக விடுவித்தல்.

84. (1) காசோலையானது, அது வழங்கப்பட்டதிலிருந்து தகுமான காலத்திற்குள் பணச்செலுத்துகைக்காகக் காட்டிக் கேட்கப்படாதிருக்கிறவிடத்து, வரைபவர், அல்லது எந்த நபருடைய கணக்கின் மேல் அது வரையப்படுகிறதோ, அந்த நபர், தமக்கும் வங்கியருக்குமிடையே காட்டிக் கேட்கப்பட வேண்டிய காலத்தில், அந்தக் காசோலைக்குப் பணம் செலுத்தப்பட வேண்டிய உரிமை பெற்றிருக்கிறவிடத்து, மற்றும் அந்தக் காலத்தாழ்வின் காரணமாக உள்ளபடியான இழப்புக்கு ஆளாகுமிடத்து, அத்தகைய இழப்பிற்கு எந்த அளவுக்கு ஆளாகியிருக்கிறாரோ அந்த அளவுக்கு, அதாவது எந்த அளவுக்கு அத்தகைய வரைபவர் அல்லது அந்த நபர், அந்த வங்கியர், அந்தக் காசோலையானது செலுத்தப்பட்டிருக்குமாயின், எந்தத் தொகைக்கு அவர் அந்த வங்கியரின் கடன் கொடுத்தவராயிருந்திருப்பாரோ அதனினும் அதிகப்படியான தொகைக்கு அவர் விடுவிக்கப்பெறுவார். காசோலை உரியவாறு காட்டிக் கேட்கப்படாத போது அதன் வாயிலாக வரைபவருக்கு இழப்பு ஏற்படுதல்.

(2) எது ஒரு தகுமான காலம் என்பதைத் தீர்மானிப்பதில், அந்த முறையாவணத்தின் தன்மை, வணிகத்தின் மற்றும் வங்கியரின் வழக்காறு, அந்தக் குறிப்பிட்ட நேர்வைப் பற்றிய பொருண்மைகள் ஆகியவற்றைக் கவனத்திற்கொள்ளுதல் வேண்டும்.

(3) எந்தக் காசோலை குறித்து அத்தகைய வரைபவர் அல்லது நபர் அவ்வாறு விடுவிக்கப்பெறுகிறாரோ அந்தக் காசோலையைக் கைக்கொண்டிருப்பவர், அத்தகைய வரைபவர் அல்லது நபருக்கு மாற்றாக அந்த வங்கியரைப் பொறுத்து எந்த அளவுக்கு விடுவிக்கப்பட்டிருக்கிறாரோ அந்த அளவுக்கு ஒரு கடன் கொடுத்தவராக மற்றும் அந்தத் தொகையை அவரிடமிருந்து வசூல் செய்வதற்கு உரிமை கொண்டவராக இருப்பார்.

**எடுத்துக்காட்டுகள்**

(அ) 'அ' என்பவர் 10,600 ரூபாய்க்கு ஒரு காசோலையை வரைகிறார். அது காட்டிக் கேட்கப்பட வேண்டியபோது, அந்த வங்கியில் அதைத் தீர்ப்பதற்கான பணத்தை வைத்திருக்கிறார்; அந்தக் காசோலை காட்டிக் கேட்கப்படுவதற்கு முன்பே அந்த வங்கி நொடித்துப் போய் விடுகிறது. வரைபவர் விடுவிக்கப் பெறுவார். ஆனால், அதைக் கைக்கொண்டிருப்பவர், அந்தக் காசோலையின் தொகைக்காக அந்த வங்கிக்கு எதிராக மெய்ப்பிக்க முடியும்.

(ஆ) கல்கத்தாவிலுள்ள வங்கிக்கு 'அ' என்பவர் அம்பல்லா என்ற இடத்தில் ஒரு காசோலையை வரைகிறார். அந்தக் காசோலை வழக்கமான முறையில் காட்டிக் கேட்கப்படுவதற்கு முன்பே, அந்த வங்கி நொடித்து போய்விடுகிறது. அந்தக் காசோலையைக் காட்டிக் கேட்பதில் ஏற்படும் காலத்தாழ்வு எதனாலும் 'அ' உள்ளபடியான இழப்பிற்கு ஆளாகவில்லை. ஆகவே, அவர் விடுவிக்கப்பெறமாட்டார்.

ஆணையின்படி செலுத்தத்தக்க காசோலை.

85. (1) ஆணையின்படி செலுத்தத்தக்க காசோலையானது, செலுத்தபடுநரால் அல்லது அவர் சார்பாக மேற்குறிப்பெழுதப்பட்டதாகப் புலப்படுமிடத்து, முறைப்படியான செலுத்துகை வாயிலாக வரைபவர் விடுவிக்கப்பெறுவார்.

(2) காசோலையானது, கொணர்பவருக்குச் செலுத்தத்தக்கது என முதன் முதலில் தெரியப்படுத்தப்படுகிறவிடத்து, அதன்மீது காணப்படுகிற ஒரு குறிப்பானது அது வெற்று மேற்குறிப்பாகவோ முழு மேற்குறிப்பாகவோ இருந்தபோதிலும், மற்றும் மேற்கொண்டு ஆவண மாற்றல் செய்வதை வரையறைப் படுத்துவதாக அல்லது விலக்குவதாக அத்தகைய மேற்குறிப்பு புலப்படுவதாக இருந்தபோதிலும் அதனைக் கொணர்பவருக்கு முறைப்படியான செலுத்துகையின் வாயிலாக வரைபவர் விடுவிக்கப்பெறுவார்.

ஆணையின்படி செலுத்தத்தக்கது என ஒரு வங்கியின் ஒரு கிளையினால் பிறிதொன்றுக்கு வரையப் பட்ட வரை வோலைகள்.

85 (அ). வரைவோலை எதுவும், அதாவது பணத்தைச் செலுத்துவதற்கான ஆணை ஒன்று கோரியவுடன் ஆணையின்படி செலுத்தத்தக்க ஒரு பணத்தொகைக்காக ஒரு வங்கியின் ஓர் அலுவலகத்தினால் அதே வங்கியின் பிறிதோர் அலுவலகத்திற்கு வரையப்படுகிறவிடத்து, அது செலுத்தப்படுநரால் அல்லது அவர் சார்பாக ஒரு மேற்குறிப்பெழுதப்பட்டிருப்பதாகப் புலப்படுகிறவிடத்து, முறைப்படியான செலுத்துகையின் வாயிலாக அந்த வங்கியானது விடுவிக்கப்படும்.

இசைவு தராத தரப்பினர்கள் மாறுதலுடன் கூடிய அல்லது வரம்புக் குட்பட்ட ஏற்பு வாயிலாக விடுவிக்கப் பெறுவர்.

86. மாற்றுச்சீட்டைக் கைக்கொண்டிருப்பவர், மாறுதலுடன்கூடிய ஏற்பு அல்லது அந்த மாற்றுச்சீட்டில் சொல்லப்பட்டுள்ள பணத்தொகையில் ஒரு பகுதிக்கு மட்டும் என்பதான வரம்புக்குட்பட்ட ஏற்பு அல்லது பணச்செலுத்துகைக்காக வெவ்வேறு இடத்தை அல்லது காலத்தை மாற்றாக அமைகிற ஏற்பு அல்லது வரைபவர்கள் கூட்டாளிகளாக இல்லாதிருக்கிறவிடத்து, வரைபவர்கள் அனைவராலும் கையொப்பமிடப்பட்டிராத ஏற்பினை, குறிப்பிசை செய்வாராயின், அத்தகைய ஏற்புக்கு எவர்களின் இசைவினைப் பெறவில்லையோ அந்த முந்திய தரப்பினர்கள் அனைவரும் கைக்கொண்டிருப்பவருக்கும், அவர் வாயிலாக உரிமை கோருகின்றவர்களுக்கும் எதிராக, கைக்கொண்டிருப்பவரால் கொடுக்கப்பட்ட அறிவிப்பின்பேரில், அவர்கள் அத்தகைய ஏற்புக்கு இசைவு தெரிவிக்கிறார்கள் என்றாலன்றி, விடுவிக்கப்படுவர்.

விளக்கம்,—ஓர் ஏற்பானது,—

(அ) செலுத்துகை அதில் உரைக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சி நிகழ்வதன்மேல், சார்ந்திருக்கும் என விளம்பும் வரைக்கட்டுக்குட்பட்டிருக்குமிடத்து,

(ஆ) செலுத்தப்பட வேண்டும் என்று ஆணையிடப்பட்ட பணத்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே செலுத்துபவராக ஏற்றுக்கொள்கிறவிடத்து,

(இ) ஆணையில் பணச்செலுத்துகைக்கான இடம் எதுவும் குறித்துரைக்கப்படாதிருந்து, ஒரு குறித்துரைக்கப்பட்ட இடத்தில் செலுத்துவதாகவும், பிறவாறாக அல்லது வேறு எங்கனும் செலுத்துவதில்லை என்பதாகவும் ஏற்றுக்கொள்கிறவிடத்து அல்லது ஆணையில் பணச்செலுத்துகைக்கான இடம் குறித்துரைக்கப்பட்டிருந்து பிறிதோர் இடத்தில் செலுத்துவதாகவும் பிறவாறாகவோ வேறு இடத்திலோ செலுத்துவதில்லை என்பதாகவும் ஏற்றுக்கொள்கிறவிடத்து,

(ஈ) செலுத்துகையை, அந்த ஆணையின்படி எதில் சட்டப்படி அது கொடுபட வேண்டியதாகிறதோ அந்தக் காலத்திலல்லாமல் பிறிதொரு காலத்தில் செலுத்துவதற்கு அது ஏற்றுக்கொள்கிறவிடத்து, அது மாறுதலுடன் கூடிய ஏற்பாகும்.

87. மாற்று முறையாவணத்தில் செய்யப்படும் ஏதேனும் பொருட்டான மாற்றுகை, முதன்முதலிலான தரப்பினர்களின் பொதுவான கருத்தை நிறைவேற்றுவதன் பொருட்டு செய்யப்பட்டிருந்தாலன்றி, அத்தகைய மாற்றுகை செய்யப்பட்ட காலத்தில் அதற்குரிய தரப்பினராக இருந்தவரும் மற்றும் அதற்கு இசைவு தராதவருமான எவரொருவருக்கும் எதிராகவும் அந்த முறையாவணம் இல்லாநிலையதாகும். பொருட்டான மாற்றுகைகளின் செயல்விளைவு.

மற்றும், அத்தகைய மாற்றுகை, ஒரு மேற்குறிப்பெழுதப் பெறுநரால் செய்யப்படுமாயின், அவருடைய மேற்குறிப்பெழுதுநரை, அதன் மறுபயனைப் பொறுத்து அவருக்குள்ள கடப்பாடுகள் அனைத்திலிருந்தும் விடுவிக்கும். மேற்குறிப் பெழுதப் பெறுநரால் செய்யப்பட்ட மாற்றுகை.

இந்தப் பிரிவின் வகையங்கள் 20, 49, 86, 125 ஆகிய பிரிவுகளின் வகையங்களுக்கு உட்பட்டவையாகும்.

88. மாற்று முறையாவணத்தின் ஏற்குநர் அல்லது மேற்குறிப்பெழுதுநர் முறையாவணத்தில் முந்திய மாற்றுகை இருந்தபோதிலும், தம்முடைய ஏற்பினால் அல்லது மேற்குறிப்பினால் கட்டுப்பட்டவர் ஆவார். முந்திய மாற்றுகை இருந்த போதிலும், ஏற்குநர் அல்லது மேற்குறிப் பெழுதுநர் கட்டுப்பட்டவர் ஆவார்.

89. கடனுறுதிச்சீட்டு, மாற்றுச்சீட்டு அல்லது காசோலையானது பொருட்டான வகையில் மாற்றுகை செய்யப்பட்டிருந்து, ஆனால், அவ்வாறு மாற்றுகை செய்யப்பட்டுள்ளது வெளிப்படையாகக் காணப்படாதவிடத்து, அல்லது ஒரு காசோலையானது செலுத்துகைக்காக காட்டிக் கேட்கப்பட்டு, அவ்வாறு காட்டிக் கேட்கப்பட்ட காலத்தில் குறுக்கோடுகள் இடப்பட்டதாகவோ அல்லது குறுக்குக் கோடுகள் இடப்பட்டு அழிக்கப்பட்டுள்ளதாகவோ காணப்படாதவிடத்து, பணம் செலுத்துவதற்குக் கடப்பாடுடைய ஒரு நபரால் அல்லது ஒரு வங்கியரால் செய்யப்பட்ட அதன் செலுத்துகை, மற்றும் அதன் மேலெழுந்த வாரியாகத் தோன்றுகிற கருத்துக்கிணங்க, செலுத்த வேண்டிய காலத்தில் மற்றும் பிறவாறாக முறையாகச் செய்யப்பட்ட அதன் செலுத்துகை அத்தகைய நபரை அல்லது வங்கியரை அதன் மேலான கடப்பாடு அனைத்திலிருந்தும் விடுவிக்கும்; மற்றும் அத்தகைய செலுத்துகையானது, அந்த முறையாவணம் மாற்றுகை செய்யப்பட்டுள்ள அல்லது அந்தக் காசோலையானது குறுக்குக் கோடிடப்பட்டுள்ள காரணத்தால் மறுத்து வாதிடப்படுதல் ஆகாது. எந்த முறை யாவணத்தின் மாற்றுகைவெளிப் படையாகக் காணப்படா திருக்கிறதோ அந்த முறை யாவணத்தின் பேரில் பணச் செலுத்துகை.

90. ஆவண மாற்றுதல் செய்யப்பட்டுள்ள மாற்றுச்சீட்டை முதிர்வுக்காலத்தில் அல்லது அதன் பின்பு, ஏற்குநர், அவரது சொந்த உரிமையில் கைக்கொண்டிருப்பாராயின், அதன்மேல் நடவடிக்கை எடுப்பதற்கான உரிமைகள் அனைத்தும் மாய்ந்து போகும். மாற்றுச் சீட்டின்மேல் நடவடிக்கை எடுக்கும் உரிமைகள் ஏற்குநர்கள் கைகளில் மாய்ந்து போதல்.

## அத்தியாயம் VIII

## மதிப்பு மறுக்கப்படுவதற்கான அறிவிப்புப் பற்றியது

91. மாற்றுச்சீட்டு வரைபவர் அல்லது கூட்டாளிகளாய் அல்லாத பல்வேறு வரைபவர்களில் ஒருவர், அந்த மாற்றுச்சீட்டை ஏற்கும்படி உரியவாறு வேண்டுறுத்தப்படுவதன்பேரில், ஏற்கத் தவறுகை செய்யும்போது, அல்லது காட்டிக் கேட்பதற்கு மன்னிப்பு அளிக்கப்பட்டிருந்து, அந்த மாற்றுச்சீட்டு ஏற்கப்படாதிருக்கிறவிடத்து, அது ஏற்கப்படாமையால் மதிப்பு மறுக்கப்பட்டது என்று கூறப்படும். ஏற்கப் படாமையால் மதிப்பு மறுக்கப்படுதல்.

வரைபவர் ஒப்பந்தம் செய்துகொள்வதற்குத் தகுதிறமற்றவராக இருக்குமிடத்து, அல்லது ஏற்பு மாறுதலுடன் கூடியதாக இருக்குமிடத்து, அந்த மாற்றுச்சீட்டு மதிப்பு மறுக்கப்பட்டதாக எடுத்துக் கொள்ளப்படலாம்.

செலுத்தப் படாமையால் மதிப்பு மறுக்கபடுதல்.

92. கடனுறுதிச்சீட்டு, மாற்றுச்சீட்டு அல்லது காசோலையானது அந்தக் கடனுறுதிச்சீட்டை எழுதுநர், அந்த மாற்றுச்சீட்டை ஏற்குநர், அல்லது அந்தக் காசோலையை வரைபவர் அதற்குரிய பணத்தைச் செலுத்தும்படி உரியவாறு வேண்டுறுத்தப்பட்டதன்பேரில், அவ்வாறு செலுத்தத் தவறுகை செய்யும்போது செலுத்தப்படாமையால் மதிப்பு மறுக்கப்பட்டது என்று கூறப்படும்.

எவரால் மற்றும் எவருக்கு அறிவிப்புக் கொடுக்கப் படுதல் வேண்டும்.

93. கடனுறுதிச்சீட்டு, மாற்றுச்சீட்டு அல்லது காசோலையானது, ஏற்கப்படாமையால் அல்லது செலுத்தப்படாமையால் மதிப்பு மறுக்கப்படும்போது, அதனைக் கைக்கொண்டிருப்பவர் அல்லது அதன்பேரில் கட்டப்பாடுடையவராகயிருக்கும் அதன் தரப்பினர் எவரும், அந்தமுறையாவணம் அவ்வாறுமதிப்பு மறுக்கப்பட்டது என்று அதனைக் கைக்கொண்டிருப்பவர் அதன் மேல் தனித்தனியாகக் கடப்பாடுடையவராகச் செய்ய முற்படுகிற பிற தரப்பினர் அனைவருக்கும் மற்றும் அவர் அதன்மேல் கூட்டாகக் கடப்பாடுடையவர்களாகச் செய்ய முற்படுகிற பல்வேறு தரப்பினர்களுள் எவர் ஒருவருக்கும்அறிவிப்பைக் கொடுத்தல்வேண்டும்.

இந்தப் பிரிவிலுள்ள எதுவும், மதிப்பு மறுக்கப்பட்ட கடனுறுதிச்சீட்டை எழுதுநருக்கு அல்லது மதிப்பு மறுக்கப்பட்ட மாற்றுச்சீட்டை அல்லது காசோலையை வரைபவருக்கு அல்லது ஏற்குநருக்கு அறிவிப்புக் கொடுப்பதைத் தேவையாக்காது.

அறிவிப்புக் கொடுக்கப்படலாகும் முறை.

94. மதிப்பு மறுக்கப்பட்டதற்கான ஓர் அறிவிப்பானது, எந்த நபருக்கு அது கொடுக்கப்பட வேண்டுறுத்தப்படுகிறதோ அந்தநபரின் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட முகவருக்கு அல்லது இறந்துபோயிருக்குமிடத்து, அவரது சட்டச் சார்பாற்றுநருக்கு அல்லது நொடித்துப் போனவர் என அவர் விளம்பப்பட்டிருக்குமிடத்து, அவரது உரிமையளிக்கப்படுநருக்குக் கொடுக்கப்படலாம்; அந்த அறிவிப்பானது, வாய்மொழியாகவோ அல்லது எழுத்து வாயிலாகவோ இருக்கலாம்; எழுத்திலிருப்பின் அஞ்சல் வழியாக அனுப்பப்படலாம்; அது ஏதேனும் படிவத்தில் இருக்கலாம்; ஆனால், எந்தத்தரப்பினருக்கு அது கொடுக்கப்படுகிறதோ அந்தத்தரப்பினருக்கு வெளிப்படையான சொற்றொடர்களால் அல்லது தரமான பொருள் விளக்கத்தால், அந்தமுறையாவணம் மதிப்புமறுக்கப்பட்டது என்பதையும் எவ்வாறு மதிப்பு மறுக்கப்பட்டது என்பதையும் மற்றும் அதன்மேல் அவர் கடப்பாடுடையவராகக் கொள்ளப்படுவார் என்பதையும் அது தெரிவித்தல் வேண்டும்; அந்த அறிவிப்பானது, அவ்வாறு மதிப்பு மறுக்கப்பட்டதன் பின்பு, ஒரு தகுமான காலத்திற்குள்ளும், எந்தத் தரப்பினருக்கு அது கொடுக்கக் கருதப்பட்டதோ அந்தத் தரப்பினரின் அலுவலிடத்திலும், அல்லது அத்தகைய தரப்பினர் அலுவலிடம் எதுவும் கொண்டிராத நேர்வில்,அந்தத் தரப்பினரின் குடியிருப்பிடத்தில் கொடுக்கப்படுதல் வேண்டும்.

அந்த அறிவிப்பானது, முறையான முகவரிக்கு அனுப்பப்பட்டும், அஞ்சல் வாயிலாக அனுப்பப்பட்டும் தவறிப்போகுமாயின், அவ்வாறு தவறிப்போவதானது அந்த அறிவிப்பைச் செல்லாததாக்காது.

மதிப்பு மறுக்கப்பட்டதற்கான அறிவிப்பை, பெறும் தரப்பினர் அனுப்புதல் வேண்டும்.

95. மதிப்பு மறுக்கப்பட்டதற்கான அறிவிப்பைப் பெறும் தரப்பினர் எவரும், தமக்குக் கடப்பாடுடையவராக முந்திய தரப்பினர் எவரையும் ஆக்கும்பொருட்டு, அந்தத் தரப்பினர் பிரிவு 93 இனால் வகை செய்யப்பட்டுள்ளவாறு, உரிய அறிவிப்பைப் பிறவாறவாகப் பெற்றிருப்பாராயின், அந்த மதிப்பு மறுக்கப்பட்டதற்கான அறிவிப்பை ஒரு தகுமான காலத்திற்குள் அத்தகைய தரப்பினருக்குக் கொடுத்தல்வேண்டும்.

காட்டிக் கேட்பதற்கான முகவர்.

96. காட்டிக் கேட்பதற்கான முகவரிடம் ஒரு முறையாவணம் வைப்பீடு செய்யப்படுகிறபோது, அந்த மதிப்பு மறுக்கப்பட்டதற்கான அறிவிப்பைக் கொடுக்கிற கைக்கொண்டிருப்பவராக அந்தமுகவர் இருந்தாற்போன்றே, தம் முதல்வருக்கு அறிவிப்பைக் கொடுக்க அதே அளவான காலத்தை எடுத்துக்கொள்ள உரிமை கொண்டவர் ஆவார்.

அறிவிப்புக் கொடுக்கப்பட்ட தரப்பினர் இறந்து போகிறபோது

97. மதிப்பு மறுக்கப்பட்டதற்கான அறிவிப்பு எந்தத் தரப்பினருக்கு அனுப்பப்பட்டதோ அந்தத்தரப்பினர் இறந்துபோயிருந்து, அவரது இறப்பைப் பற்றி, அந்த அறிவிப்பை அனுப்புகிற தரப்பினர் அறியாதிருப்பாராயின், அந்த அறிவிப்பே போதுமானதாகும்.

மதிப்பு மறுக்கப் பட்டதற்கான அறிவிப்பு தேவையில்லாதது எப்போது.

98. மதிப்பு மறுக்கப்பட்டதற்கான அறிவிப்பு எதுவும்,—

(அ) அதைப்பெறுவதற்கு உரிமைகொண்ட தரப்பினர், அதைவேண்டாமென விட்டுவிடும்போது;

(ஆ) வரைபவர் பணம்செலுத்துதல் ஆகாது என எதிர்கட்டளையிட்டிருக்கும்போது, அவர் மீது பொறுப்புச் சுமத்துவதன் பொருட்டு;

(இ) பொறுப்புச் சுமத்தப்பட்ட தரப்பினர், அறிவிப்பின்மை காரணமாக இழப்பு அடையாதபோது;

(ஈ) அறிவிப்புப் பெறுவதற்கு உரிமைகொண்ட தரப்பினர் உரியவாறு தேடிய பின்பு காணப்படாதபோது அல்லது அந்த அறிவிப்பைக் கொடுப்பதற்குக் கட்டுப்பட்ட தரப்பினர் தமது சொந்த தவறு எதுவும் காரணமாக இல்லாமல் பிற காரணம் எதற்காகவும் அதைக்கொடுப்பதற்கு இயலாதபோது;

(உ) ஏற்குநர் ஒரு வரைபவராக இருக்கும்போது, வரைபவர்கள் மீது பொறுப்புச் சுமத்துவதற்கு;

(ஊ) கடனுறுதிச் சீட்டானதுமாற்றத்தக்கதாக இல்லாத நேர்வில்,

(எ) அறிவிப்பைப் பெறுவதற்கு உரிமையுடைய தரப்பினர் பொருண்மைகளை அறிந்திருந்தோ, அந்த முறையாவணத்தின் மேல் கொடுபட வேண்டியதொகையைச் செலுத்துவதற்கு வரைக்கட்டின்றி உறுதியுரையளிக்கும் போது,

தேவையாகாது.

## அத்தியாயம் IX

## மதிப்பு மறுப்புக்குறிப்பு மற்றும் மறுப்புக்குறிப்பு பற்றியது

99. கடனுறுதிச்சீட்டு அல்லது மாற்றுச்சீட்டு ஏற்கப்படாமையால் அல்லது செலுத்தப்படாமையால் மதிப்பு மறுக்கப்பட்டுள்ளது. அதைக் கைக்கொண்டிருப்பவர் அத்தகைய மதிப்பு மறுக்கப்பட்டதை, அந்த முறையாவணத்தின் மேல் அல்லது அத்துடன் இணைக்கப்பட்ட ஒரு தாளின் மேல் அல்லது அந்த ஒவ்வொன்றின் மேலும் பகுதியாகச் சான்றுறுதி அதிகாரி ஒருவரால் மதிப்பு மறுப்புக்குறிப்பெழுதச் செய்விக்கலாம். மதிப்பு மறுப்புக் குறிப்பு.

அத்தகைய மதிப்பு மறுப்புக்குறிப்பானது, மதிப்பு மறுக்கப்பட்டதன் பின்பு, தகுமான காலத்திற்குள் செய்யப்படுதல் வேண்டும். மற்றும், மதிப்பு மறுக்கப்பட்ட தேதியை, அத்தகைய மதிப்பு மறுக்கப்பட்டதற்கு அளிக்கப்பட்ட காரணம், ஏதேனுமிருப்பின், அதையும் அல்லது அந்த முறையாவணம் வெளிப்படையாக மதிப்பு மறுக்கப்படாதிருக்குமாயின், அதைக் கைக்கொண்டிருப்பவர் ஏன் அதை மதிப்பு மறுக்கப்பட்டதாக எடுத்துக் கொள்கிறார் என்ற காரணத்தையும் அந்தச்சான்றுறுதிச் செலவுகளையும் குறித்துரைத்தல் வேண்டும்.

100. கடனுறுதிச் சீட்டு அல்லது மாற்றுச் சீட்டானது, ஏற்கப்படாமையால் அல்லது செலுத்தப்படாமையால் மதிப்பு மறுக்கப்பட்டுள்ளபோது, அதைக் கைக்கொண்டிருப்பவர் தகுமான காலத்திற்குள் அத்தகைய மதிப்பு மறுக்கப்பட்டது பற்றிச் சான்றுறுதி அதிகாரி ஒருவரால் மதிப்பு மறுப்புக் குறிப்பெழுதப்பட்டு, உறுதிச் சான்றளிக்கும்படி செய்விக்கலாம். அத்தகைய உறுதிச்சான்று மதிப்பு மறுக்கப்பட்டதற்கான மறுப்புக்குறிப்பு என்று வழங்கப்பெறும். மறுப்புக்குறிப்பு.

மாற்றுச் சீட்டை ஏற்குநர், நொடித்துப்போனவராக, ஆகியிருக்கும்போது அல்லது அவரது செல்வாக்குக்குப் பொதுவில் பழிச்சாட்டு கூறப்பட்டிருக்கும்போது முதிர்வுக் காலத்திற்கு முன்பு அதைக் கைக்கொண்டிருப்பவர், தகுமான காலத்திற்குள் அதனை ஏற்குநரிடமிருந்து சான்றுறுதி அதிகாரி ஒருவரை மேம்பட்ட பிணையம் கோரும்படி செய்விக்கலாம். அவ்வாறு கொடுப்பது மறுக்கப்படுவதன் பேரில், தகுமான காலத்திற்குள் அத்தகைய பொருண்மைகளை மேற்கூறப்பட்டவாறு மதிப்பு மறுப்புக் குறிப்பெழுதும்படியும், உறுதிச்சான்றளிக்கும்படியும், செய்விக்கலாம்; அந்த உறுதிச் சான்றானது, மேற்பட்ட பிணையத்துக்கான மறுப்புக்குறிப்பு என்று வழங்கப்பெறும். மேம்பட்ட பிணையத்துக் காக மறுப்புக்குறிப்பு.

101. பிரிவு 100 இன்படியான மறுப்புக் குறிப்பொன்று,— மறுப்புக் குறிப்பின் உள்ளடக்கம்.

(அ) ஒன்று, அந்த முறையாவணத்தை அல்லது அந்த முறையாவணத்தின் சொல்லுக்குச் சொல் சரியான எழுத்துப் படியொன்று மற்றும் அதன் பேரில் எழுதப்பட்ட அல்லது அச்சடிக்கப்பட்ட ஒவ்வொன்றையும்,

(ஆ) அந்த முறையாவணம் எந்த நபருக்காக அல்லது எந்த நபருக்கு எதிராக மறுப்புக்குறிப்பெழுதப்பட்டிருந்ததோ அந்த நபரின் பெயரையும்,

(இ) நேர்வுக்கேற்ப, பணச்செலுத்துகை அல்லது ஏற்பு அல்லது மேம்பட்ட பிணையம் சான்றுறுதி அதிகாரி ஒருவரால் அத்தகைய நபரிடமிருந்து கோரப்பட்டிருந்தது என்ற ஓர் உரையை, அவரது மறுமொழி ஏதேனுமிருப்பின், அதன் சொற்றொடர்கள் அல்லது அவர் மறுமொழி எதுவும் கூறவில்லை என்ற ஓர் உரையை அல்லது அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்ற உரையையும்,

(ஈ) கடனுறுதிச் சீட்டு அல்லது மாற்றுச்சீட்டு மதிப்பு மறுக்கப்பட்டுள்ளபோது, மதிப்பு மறுக்கப்பட்ட இடத்தையும் காலத்தையும் மற்றும் மேம்பட்ட பிணையம் மறுக்கப்பட்டுள்ளபோது மறுக்கப்பட்ட இடத்தையும் காலத்தையும்,

(உ) அந்த மறுப்புக் குறிப்பினை எழுதும் சான்றுறுதி அதிகாரியின் அடிக்கையொப்பத்தையும்,

(ஊ) மதிப்பளிப்புக்கு ஏற்பு அல்லது மதிப்பளிப்புக்குப் பணச்செலுத்துகையின் போது; எந்த நபரால் எந்த நபருக்காக மற்றும் எந்த முறையில் அத்தகைய ஏற்பு அல்லது பணச் செலுத்துகை கொடுக்க முனையப்பட்டதோ மற்றும் செல்திறப்படுத்தப்பட்டதோ அந்த நபர்களின் பெயர்களையும் முறையையும்,

கொண்டிருத்தல்வேண்டும்.

இந்தப் பிரிவின்கூறு (இ) இல் குறிப்பிடப்பட்ட கோரிக்கையை, சான்றுறுதி அதிகாரி ஒருவர், ஒன்று, நேர்முகமாக அல்லது அவருடைய எழுத்தர் வாயிலாகச் செய்யலாம் அல்லது உடன்பாடு அல்லது வழக்காறு வாயிலாக அதிகாரமளிக்கப்பட்டிருக்குமிடத்து, பதிவு அஞ்சல் கடிதம் வாயிலாகச் செய்யலாம்.

மறுப்புக் குறிப்புக்கான அறிவிப்பு.

*102.* கடனுறுதிச் சீட்டு அல்லது மாற்றுச் சீட்டானது, மறுப்புக் குறிப்பு எழுதப்பட வேண்டுமென்று சட்டத்தின் வாயிலாக வேண்டுறுத்தப்படுகிறபோது, மதிப்பு மறுக்கப்பட்டமைக்கான அறிவிப்புக்கு மாற்றாக அத்தகைய மறுப்புக் குறிப்புக்கான அறிவிப்பானது, அதேமுறையில், அதே வரைக்கட்டுகளுக்கு உட்பட்டுக் கொடுக்கப்படுதல் வேண்டும்; ஆனால், அந்த அறிவிப்பானது, அந்தமறுப்புக் குறிப்பை எழுதுகிற சான்றுறுதி அதிகாரியால் கொடுக்கப்படலாம்.

ஏற்கப்படாமை, மதிப்பு மறுப்புக்குப் பின்புபணச் செலுத்தா மைக்கான மறுப்புக் குறிப்பு.

*103.* வரைபவரின் குடியிருப்பிடமொன்று குறிப்பிடப்பட்ட இடமல்லாத பிற ஏதாவது இடத்தில் செலுத்தத்தக்கது என்றுவரையப்பட்டதும், ஏற்கப்படாமையால் மதிப்பு மறுக்கப்படுகின்றவையுமான மாற்றுச் சீட்டுகள் அனைத்தும், வரைபவரிடம் மேற்கொண்டும் காட்டிக் கேட்காமலே முதிர்வுக் காலத்திற்கு முன்பு அல்லது முதிர்வுக்காலத்தில் செலுத்தப்பட்டாலன்றி, பணச் செலுத்துகைக்காகக் குறித்துரைக்கப்பட்ட இடத்தில் செலுத்தப்படாமைக்காக மறுப்புக் குறிப்பு எழுதப்படலாம்.

அயல்நாட்டு மாற்றுச் சீட்டுகளுக்கான மறுப்புக் குறிப்பு.

*104.* அயல்நாட்டு மாற்றுச் சீட்டுகள், மதிப்பு மறுக்கப்பட்டதற்கான மறுப்புக்குறிப்பு, எங்குஅவை வரையப்படுகின்றனவோ அந்த இடத்தின் சட்டத்தின் வாயிலாக அத்தகைய மறுப்புக்குறிப்பு வேண்டுறுத்தப்படுகிறபோது, எழுதப்படுதல் வேண்டும்.

மதிப்பு மறுப்புக்குறிப்பு எப்போது மறுப்புக் குறிப்புக்குச் சமமாதல்.

*104(அ).* இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக மாற்றுச்சீட்டு அல்லது கடனுறுதிச்சீட்டு ஒரு குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் அல்லது ஏதேனும் மேல் நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு முன்பு, மறுப்புக் குறிப்பு எழுதப்பட்டிருக்க வேண்டுமென்று, வேண்டுறுத்தப்படுகிறவிடத்து, அந்தக் குறித்துரைக்கப்பட்ட காலம் முடிவுறும் அல்லது அந்த நடவடிக்கை எடுக்கப்படும் முன்பு, அந்தமாற்றுச் சீட்டானது மறுப்புக் குறிப்புக்காக மதிப்பு மறுப்புக் குறிப்பெழுதப்பட்டிருக்கிறது என்பதே போதுமானதாகும், மற்றும் முறைப்படியான மறுப்புக் குறிப்பு, அதன்பின்பு, எந்தக் காலத்திலும் அந்த மதிப்பு மறுப்புக் குறிப்பு எழுதுகைத் தேதியைப் போலவே நீட்டிக்கப்படலாம்.

## அத்தியாயம் X

### தகுமான காலம் பற்றியது

105. ஏற்புக்காக அல்லது பணச் செலுத்துகைக்காகக் காட்டிக் கேட்கப்படுவதற்கான மதிப்பு மறுக்கப்பட்டது பற்றிய அறிவிப்பைக் கொடுப்பதற்கான மற்றும் மதிப்பு மறுப்புக் குறிப்பெழுதுதற்கான தகுமான காலம் எது என்பதைத் தீர்மானிக்கையில், அந்த முறையாவணத்தின் தன்மையையும், அதே போன்ற முறையாவணங்கள் பொறுத்த வழக்கமான நடவடிக்கையின் போக்கையும் கவனத்திற்கொள்ளுதல் வேண்டும்; மற்றும், அத்தகைய காலத்தைக் கணக்கிடுகையில் பொது விடுமுறை நாட்கள் நீக்கப்படுதல் வேண்டும்.

தகுமான காலம்.

106. கைக்கொண்டிருப்பவரும், எந்தத் தரப்பினருக்கு மதிப்பு மறுக்கப்பட்டது பற்றிய அறிவிப்புக் கொடுக்கப்படுகிறதோ அந்தத் தரப்பினர் தொழிலை நடத்துவாராயின் அல்லது (நேர்வுக்கேற்ப) வெவ்வேறிடங்களில் வாழ்ந்து வருவாராயின், அத்தகைய அறிவிப்பானது அடுத்த அஞ்சலில் அல்லது மதிப்பு மறுக்கப்பட்ட நாளுக்கு அடுத்த நாளன்று அனுப்பப்படுமாயின், அத்தகைய அறிவிப்பு, தகுமான காலத்தில் கொடுக்கப்பட்டதாகும்.

மதிப்பு மறுக்கப்பட்டது பற்றிய அறிவிப்பைக் கொடுப்பதற்குத் தகுமான காலம்.

மேற்சொன்ன தரப்பினர்கள், ஒரே இடத்தில் தொழில் நடத்தியோ, வாழ்ந்தோ வருவார்களாயின், மதிப்பு மறுக்கப்பட்ட நாளுக்கு அடுத்த நாளன்று, அந்த அறிவிப்பானது, அது சேர வேண்டிய இடத்திற்குச் சேருவதற்குக் காலத்தே அனுப்பப்படுமாயின், அது தகுமான காலத்திற்குள் கொடுக்கப்பட்டதாகும்.

107. மதிப்பு மறுக்கப்பட்டது பற்றிய அறிவிப்பு ஒன்றைப் பெற்று, முந்திய தரப்பினர் ஒருவருக்கு எதிராகத் தமது உரிமையை நிலைநாட்ட விரும்புகிற தரப்பினர் ஒருவர், அதைப் பெற்ற பின்பு, அவரே அதைக் கைக்கொண்டிருப்பவராக இருப்பாராயின், எதற்குள்ளாக அந்த அறிவிப்பைக் கொடுத்திருக்க வேண்டுமோ அந்தக் காலத்திற்குள் அனுப்பி வைப்பாராயின், அவர் அந்த அறிவிப்பைத் தகுமான காலத்திற்குள் அனுப்பி வைத்தவர் ஆவார்.

அத்தகைய அறிவிப்பை அனுப்பி வைப்பதற்கான தகுமானகாலம்.

## அத்தியாயம் XI

### மதிப்பளிப்புக்கு ஏற்பு மற்றும் பணச்செலுத்துகை மற்றும் தேவைப்படும் நேர்வில் சுட்டுதல்

108. மாற்றுச்சீட்டானது ஏற்கப்படாமைக்காக அல்லது மேம்பட்ட பிணையத்துக்காக, மதிப்பு மறுப்புக் குறிப்பெழுதப்பட்டிருக்கும்போது, அல்லது மறுப்புக் குறிப்பு எழுதப்பட்டிருக்கும்போது, அதன் மேல் முன்னமேயே கடப்பாடுடைய தரப்பினராக இராதநபர் ஏவரும், கைக்கொண்டிருப்பவரின் இசைவுடன், அந்த மாற்றுச் சீட்டின் மேல் எழுதுவதன் வாயிலாக, அதற்குரிய தரப்பினர் எவரும் மதிப்பளிப்புக்காக அதனை ஏற்கலாம்.

மதிப்பளிப்புக்கு ஏற்பு.

109. மதிப்பளிப்புக்கு ஏற்பு விரும்புகிற ஆள் ஒருவர் மதிப்புக் குறிப்பெழுதப்பட்ட மாற்றுச் சீட்டினை மறுப்புக் குறிப்புக்குட்பட்டு அந்த வரைபவருக்கு அல்லது தம்மால் பெயர் குறிக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட மேற்குறிப்பெழுதுநருக்கு மதிப்பளிப்புக்காக அல்லது பொதுவகையில் மதிப்பளிப்புக்காக ஏற்கிறார் என்று அந்த மாற்றுச் சீட்டின் மேல் தம் கையொப்பமிட்டு எழுதித் தெரிவிப்பதன் வாயிலாக விளம்புகை செய்தல் வேண்டும்.

மதிப்பளிப்புக்கு ஏற்பு எவ்வாறு செய்யப்படுதல் வேண்டும்.

110. எவருடைய மதிப்பளிப்புக்கு ஏற்கப்பட்டது என்பதை வெளிப்படையாகத் தெரிவிக்காதவிடத்து, வரைபவரின் மதிப்பளிப்புக்காகச் செய்யப்பட்டது என்று அது கொள்ளப்படுதல் வேண்டும்.

எவருடைய மதிப்பளிப்புக்கு ஏற்பு என்பதைக் குறித்துரையாதிருத்தல்.

111. மதிப்பளிப்புக்கு ஏற்குநர் ஒருவர், எந்தத் தரப்பினருக்கு மதிப்பளிப்புக்கு மாற்றுச் சீட்டின் தொகையை வரைபவர் செலுத்தாதிருப்பாராயின், அதைத் தாம்செலுத்துவதற்கு ஏற்கிறாரோ அந்தத் தரப்பினருக்குப் பிந்திய தரப்பினர்கள் அனைவருக்கும் பணம் செலுத்தத் தம்மைக் கட்டுப்படுத்திக்கொள்கிறார். மற்றும் அத்தகைய தரப்பினரும், முந்திய தரப்பினர்கள் அனைவரும், அவரவர்களுக்குரிய நிலை முறைகளில் அத்தகைய ஏற்பின் விளைவாக மதிப்பளிப்புக்கு ஏற்குநருக்கு ஏற்பட்டஇழப்பு அல்லது சேதம் அனைத்திற்கும் அவருக்குச் சரியீடு செய்யக் கடப்பாடுடையவர் ஆவார்.

மதிப்பளிப்புக்கு ஏற்குநரின் கடப்பாடு.

ஆனால், மதிப்பளிப்புக்கு ஏற்குநர், அந்த மாற்றுச்சீட்டு, முதிர்வடையும் நாளுக்கு அடுத்த நாளுக்குப் பிந்தாமல், அது காட்டிக் கேட்கப்பட்டிருந்தாலன்றி, அல்லது (அத்தகைய ஏற்குநர் அந்த மாற்றுச் சீட்டின் மேல் கொடுத்திருக்கும் முகவரியானது, அந்த மாற்றுச் சீட்டுக்குப் பணம் செலுத்தத்தக்கதாயிருக்கிற இடமல்லாத பிற இடமாக இருக்கும் நேர்வில்) அடுத்த நாளுக்குப் பிந்தாமல் காட்டிக் கேட்கப்படுவதற்காக அனுப்பப்பட்டிருந்தாலன்றி, அவர் மாற்றுச்சீட்டினைக் கைக்கொண்டிருப்பவருக்குக் கடப்பாடுடையவர் ஆகார்.

மதிப்பளிப்புக்கு ஏற்குநர்மீது எப்போது பொறுப்புச் சுமத்தப் படலாம்.

112. மதிப்பளிப்புக்கு ஏற்குநர் மீது மாற்றுச்சீட்டின் முதிர்வுக்காலத்தில், பணச்செலுத்துகைக்காக வரைபவரிடம் காட்டிக் கேட்கப்பட்டிருந்து மற்றும் அவரால் மதிப்பு மறுக்கப்பட்டிருந்து மற்றும் அத்தகைய மதிப்பு மறுப்புக்காக மதிப்பு மறுப்புக்குறிப்பு அல்லது மறுப்புக்குறிப்பு எழுதப்பட்டிருந்தாலன்றி, பொறுப்புச் சுமத்தப்படுதல் ஆகாது.

மதிப்பளிப்புக்கும் பணச் செலுத்துகை.

113. ஒரு மாற்றுச்சீட்டானது செலுத்தப்படாமைக்காக, மதிப்பு மறுப்புக் குறிப்பெழுதப்பட்டிருக்கிற அல்லது மறுப்புக் குறிப்பெழுதப்பட்டிருக்கிறபோது அதற்குச் செலுத்துவதற்குக் கடப்பாடுடைய தரப்பினர் எவருக்கும் மதிப்பளிப்புக்கு ஆள் எவரும் அந்தப் பணத்தைச் செலுத்தலாம் ஆனால், அவ்வாறு செலுத்துகிற நபர் அல்லது அவர் சார்பாகச் செலுத்துகிற அவருடைய முகவர், சான்றுறுதி அதிகாரி ஒருவர் முன்பு எந்தத் தரப்பினரின் மதிப்பளிப்புக்கு அவர் பணம் செலுத்துகிறாரோ அந்தத் தரப்பினரை, முந்தியே விளம்புகை செய்திருத்தல் வேண்டும் மற்றும் அத்தகைய விளம்புகையானது, அத்தகைய சான்றுறுதி அதிகாரியால் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

மதிப்பளிப்புச் செலுத்துநரின் உரிமை.

114. அவ்வாறு செலுத்துகிற நபர் எவரும், அத்தகைய பணச்செலுத்துகையின்போது, கைக்கொண்டிருப்பவர் மாற்றுச் சீட்டைப் பொறுத்துப் பெற்றிருக்கிற உரிமைகள் அனைத்தையும் பெறுவதற்கு உரிமை கொண்டவர் ஆவார்; மற்றும் எந்தத் தரப்பினரின் மதிப்பளிப்புக்கு அவர் செலுத்துகிறாரோ அந்தத் தரப்பினரிடமிருந்து அவ்வாறு செலுத்தப்பட்ட பணத்தொகைகள் அனைத்தையும், அவற்றின் மேலான வட்டியுடனும், அத்தகைய செலுத்துகையைச் செய்கையில் முறையாகச் செய்ய நேர்ந்த செலவுகள் அனைத்துடனும் வசூல் செய்யலாம்.

தேவை ஏற்படும் நேர்வில் வரைபவர்.

115. ஒரு மாற்றுச்சீட்டில் அல்லது அதன் மேலான மேற்குறிப்பு எதிலும், தேவை ஏற்படும் நேர்வில், வரைபவர் பெயர் குறிக்கப்பட்டிருக்கிறவிடத்து, அத்தகைய வரைபவரால் அது மதிப்பு மறுக்கப்பட்டிருக்கிற வரையில், அந்தமாற்றுச் சீட்டானது மதிப்பு மறுக்கப்பட்டதாகாது.

மறுப்புக் குறிப்பு இல்லாமல் ஏற்பு மற்றும் செலுத்துகை.

116. தேவை ஏற்படும் நேர்வில் வரைபவர் முந்திய மறுப்புக் குறிப்பு இல்லாமல் மாற்றுச்சீட்டை ஏற்கலாம் மற்றும் அதற்காகப் பணம் செலுத்தலாம்.

## அத்தியாயம் XII

## சரியீடு பற்றியது

சரியீடு குறித்த விதிகள்.

117. கடனுறுதிச்சீட்டு, மாற்றுச்சீட்டு அல்லது காசோலையானது மதிப்பு மறுக்கப்படும் நேர்வில், அதைக் கைக்கொண்டிருப்பவருக்கு அல்லது மேற்குறிப்பெழுதுநர் எவருக்கும், கடப்பாடுடைய தரப்பினர் எவராலும் செலுத்தத்தக்க சரியீடானது, பின்வரும் விதிகளின்வழி தீர்மானிக்கப்படுதல் வேண்டும்:—

(அ) அந்த முறையாவணத்தின்மேல் கொடுபட வேண்டிய தொகையை, அதைக் காட்டி கேட்பதில், மதிப்பு மறுப்புக்குறிப்பு எழுதுவதில், மறுப்புக் குறிப்பெழுதுவதில் முறைப்படி செய்ய நேர்ந்த செலவுகளுடன் சேர்த்துத் தண்டல் செய்வதற்குக் கைக்கொண்டிருப்பவர் உரிமை கொண்டவர் ஆவார்;

(ஆ) பொறுப்புச் சுமத்தப்பட்ட நபர், அந்த முறையாவணம் செலுத்தத்தக்கதாகவுள்ள இடமல்லாத பிற இடத்தில் குடியிருக்கும்போது, கைக்கொண்டிருப்பவர் அத்தகைய பணத்தொகையை, அந்த இரண்டு இடங்களுக்குமிடையே நடப்பு மாற்று வீதத்தில் பெறுவதற்கு உரிமை கொண்டவர் ஆவார்;

(இ) கடப்பாட்டிற்கு ஆளாகியவரும் அதன்பேரில் கொடுபட வேண்டிய தொகையைச் செலுத்தி இருக்கிறவருமான மேற்குறிப்பெழுதுநர் ஒருவர், அவ்வாறு செலுத்தப்பட்ட தொகையினை, செலுத்துகைத் தேதியிலிருந்து, செலுத்த முற்படுகிற வரையிலும் அல்லது அதனைத் தண்டல் செய்யும் வரையிலும் ஆண்டு ஒன்றுக்கு ஆறு விழுக்காடு வட்டியுடனும், மதிப்பு மறுக்கப்பட்டதால் மற்றும் பணச் செலுத்துகையால் ஏற்பட்ட செலவுகள் அனைத்துடனும் சேர்த்துப் பெறுவதற்கு உரிமை கொண்டவர் ஆவார்;

(ஈ) பொறுப்புச் சுமத்தப்பட்ட நபரும் மேற்குறிப்பெழுதுநரும் வெவ்வேறு இடங்களில் குடியிருக்கும்போது அந்த மேற்குறிப்பெழுதுநர் அந்தப் பணத்தொகையை அந்த இரண்டு இடங்களுக்கும் இடையே நடப்பு மாற்று வீதத்தில் பெற்றுக் கொள்வதற்கு உரிமை கொண்டவர் ஆவார்;

(உ) சரியீடு பெறுவதற்கு உரிமைகொண்ட தரப்பினர், தமக்குச் சரியீடு செய்யக் கடப்பாடுடைய தரப்பினருக்கு, தமக்குக் கொடுபட வேண்டிய தொகைக்காக முறையாகத் தம்மால் செய்ய நேர்ந்த செலவுகள் அனைத்துடனும் சேர்த்து, காட்டியவுடன் அல்லது கோரியவுடன் செலுத்தத்தக்க ஒரு மாற்றுச்சீட்டை வரையலாம். அத்தகைய மாற்றுச்சீட்டு, மதிப்பு மறுக்கப்பட்ட முறையாவணத்தையும் அதன் மேல் மறுப்புக் குறிப்பு (ஏதேனுமிருப்பின்) அதனுடன் சேர்ந்து போதல் வேண்டும். அத்தகைய மாற்றுச்சீட்டானது மதிப்பு மறுக்கப்படுமாயின், அதற்கு மதிப்பு மறுக்கும் தரப்பினர், முதன் முதலிலிருந்த மாற்றுச் சீட்டைப் பொறுத்தவரை, அதே முறையில் சரியீடு செய்வதற்கும் கடப்பாடுடையவர் ஆவார்.

## அத்தியாயம் XIII

## சான்று பற்றிய சிறப்பு விதிகள்

118. மாறானது மெய்ப்பிக்கப்படும் வரையில், பின்வரும் துணிபுகள்—

(அ) மாற்று முறையாவணம் ஒவ்வொன்றும் மறுபயனுக்காகவே செய்யப்பட்டது அல்லது வரையப்பட்டது என்று மற்றும் அத்தகைய முறையாவணம் ஒவ்வொன்றும், அது ஏற்கப்பட்டிருக்கிறபோது, மேற்குறிப்பு எழுதப்பட்டிருக்கிறபோது, ஆவணமாற்றுதல் செய்யப்பட்டிருக்கிறபோது அல்லது உரிமை மாற்றம் செய்யப்பட்டிருக்கிறபோது அல்லது மறுபயனுக்காகவே ஏற்கப்பட்டது. மேற்குறிப்பெழுதப்பட்டது, ஆவண மாற்றுதல் செய்யப்பட்டது அல்லது உரிமை மாற்றம் செய்யப்பட்டது என்று; மாற்று முறையாவணங்கள் குறித்த துணிபுகள், மறுபயன் பற்றி.

(ஆ) ஒரு தேதியைக் கொண்டுள்ள மாற்று முறையாவணம் ஒவ்வொன்றும் அத்தகைய தேதியில் எழுதப்பட்டது அல்லது வரையப்பட்டது என்று; தேதி குறித்து.

(இ) ஏற்கப்பட்ட மாற்றுச்சீட்டு ஒவ்வொன்றும், அதன் தேதிக்குப் பின்பு மற்றும் அதன் முதிர்வுக் காலத்திற்கு முன்பு தகுமான காலத்திற்குள் ஏற்கப்பட்டது என்று; ஏற்புக்காலம் குறித்து.

(ஈ) ஒரு மாற்று முறையாவணத்தின் உரிமை மாற்றம் ஒவ்வொன்றும், அதன் முதிர்வுக் காலத்திற்கு முன்பு செய்யப்பட்டது என்று; உரிமை மாற்றக்காலம் குறித்து.

(உ) ஒரு மாற்று முறையாவணத்தின்மேல் காணப்படுகிற மேற்குறிப்புகள், அதன்மேல் எந்த வரிசைமுறையில் காணப்படுகின்றனவோ அந்த வரிசைமுறையில் எழுதப்பட்டன என்று; மேற்குறிப்புகளின் வரிசை முறை குறித்து.

(ஊ) தொலைந்துவிட்ட கடனுறுதிச்சீட்டு, மாற்றுச்சீட்டு அல்லது காசோலையானது முறையாக முத்திரை வில்லை ஒட்டப்பட்டது என்று; முத்திரை வில்லைகள் குறித்து.

(எ) ஒரு மாற்று முறையாவணத்தைக் கைக்கொண்டிருப்பவர் அதை முறைப்படி கைக்கொண்டிருப்பவர் ஆவார் என்று: கைக்கொண்டிருப்பவர் முறைப்படிக் கைக்கொண்டிருப்பவராதல்.

***வரம்புரையாக:*** ஒரு முறையாவணம் அதன் சட்டப்படியான சொந்தக்காரரிடமிருந்து அல்லது மோசடியின் வாயிலாகப் பெறப்பட்டிருக்கிறவிடத்து, அல்லது அதன் வரைபவரிடமிருந்து அல்லது ஏற்குநரிடமிருந்து, ஒரு குற்றச் செயல் அல்லது மோசடியின் வாயிலாக அல்லது சட்டமுரணான மறுபயனுக்காகப் பெறப்பட்டிருக்கிறவிடத்து, அதைக் கைக்கொண்டிருப்பவர் தாம் முறைப்படி கைக்கொண்டிருப்பவர் என மெய்ப்பிக்கும் சுமையானது அவர்மேல் இருக்கிறது என்று கொள்ளப்படுதல் வேண்டும்.

மறுப்புக் குறிப்புக்கான மெய்ப்பிப்பின் மேல் துணிபு.

*119.* மதிப்பு மறுக்கப்பட்டுள்ள ஒரு முறையாவணத்தின் மேல், ஓர் உரிமை வழக்கில் நீதிமன்றம், மறுப்புக் குறிப்பிற்கான மெய்ப்பிப்பின் மேல், மதிப்பு மறுக்கப்பட்டதன் பொருண்மையானது மெய்ப்பிக்கப்பட்டாலன்றியும், மெய்ப்பிக்கப்படும் வரையிலும் அத்தகைய பொருண்மை குறித்து துணிபுகொள்ளுதல் வேண்டும்.

முறையாவணத்தின் முதன் முதலான செல்லுந் தன்மையை மறுதலிப்பதற்கு எதிரான மறுப்புத்தடை.

*120.* ஒரு கடனுறுதிச்சீட்டை எழுதுநர் எவரும் மற்றும் ஒரு மாற்றுச்சீட்டை அல்லது காசோலையை வரைபவர் எவரும் மற்றும் வரைபவரின் மதிப்பளிப்புக்கான மாற்றுச்சீட்டு ஒன்றின் ஏற்குநர் எவரும், உரிய முறையில் கைக்கொண்டிருப்பவர் ஒருவரால், அதன் மேல் தொடரப்பட்ட உரிமை வழக்கில் அந்த முறையாவணம் முதன் முதலில் எழுதப்பட்ட அல்லது வரையப்பட்டவாறான அதன் செல்லுந்தன்மையை மறுதலிப்பதற்கு இசைவளிக்கப்படுதல் ஆகாது.

மேற்குறிப் பெழுதுவதற்குச் செலுத்தப் படுதருக்குள்ள திறமுறையை மறுதலிப்பதற்கு எதிரான மறுப்புத்தடை.

*121.* ஒரு கடனுறுதிச் சீட்டை எழுதுநர் எவரும் மற்றும் ஆணையின்படி செலுத்தத்தக்க ஒரு மாற்றுச்சீட்டை ஏற்குநர் எவரும், முறைப்படி கைக்கொண்டு இருப்பவரால் அதன் மேல் தொடரப்பட்ட ஓர் உரிமை வழக்கில் அந்தக் கடனுறுதிச் சீட்டு அல்லது மாற்றுச்சீட்டு எழுதப்பட்ட தேதியன்று அதன்மேல் மேற்குறிப்பு எழுதுவதற்குச் செலுத்தப்படுநருக்குள்ள திறமுறையை மறுதலிப்பதற்கு இசைவளிக்கப்படுதல் ஆகாது.

முந்திய தரப்பினரின் கையொப்பத்தின் அல்லது திறமுறையின் மறுதலிப்புக்கு எதிரான மறுப்புத்தடை.

*122.* ஒரு மாற்று முறையாவணத்தில் மேற்குறிப்பெழுதுநர் எவரும், பிந்திய கைக்கொண்டிருப்பவர் ஒருவரால், அதன் மேல் தொடரப்பட்ட உரிமைவழக்கில், அந்தமுறையாவணத்தின் முந்திய தரப்பினர் எவரின் கையொப்பத்தை அல்லது ஒப்பந்தம் செய்துகொள்வதற்கான திறமுறையை மறுதலிப்பதற்கு இசைவளிக்கப்படுதல் ஆகாது.

## அத்தியாயம் XIV

## குறுக்குக் கோடிடப்பட்ட காசோலைகள் பற்றியது

பொது வகையில் குறுக்குக் கோடிடப்பட்டக் காசோலை.

*123.* ஒரு காசோலையானது, "மாற்றத்தக்கதன்று" என்ற சொற்றொடர்களுடனோ அல்லது இல்லாமலோ அதன் முகப்பில் குறுக்காக இரண்டு இணை தொலைவுக் குறுக்குக் கோடுகளுக்கிடையே "மற்றும் நிறுமம்" என்ற சொற்களை அல்லது அவற்றின் சுருக்கக் குறியீட்டினைக் கூடுதலாகக் கொண்டிருக்குமிடத்து, அல்லது வெறும் இரண்டு இணை தொலைவுக் குறுக்குக் கோடுகளைக் கூடுதலாகக் கொண்டிருக்குமிடத்து, அந்தக் கூடுதலான சேர்க்கை குறுக்குக் கோடாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும், அந்தக் காசோலையானது பொது வகையில் குறுக்குக் கோடிடப்பட்டக் காசோலை எனக் கொள்ளப்படுதல் வேண்டும்.

சிறப்பு வகையில் குறுக்குக் கோடிடப் பட்டக் காசோலை.

*124.* ஒரு காசோலையானது, "மாற்றத்தக்கதன்று" என்ற சொற்களுடனோ அல்லது இல்லாமலோ அதன் முகப்பில் குறுக்காக ஒரு வங்கியரின் பெயரைக் கூடுதலாகக் கொண்டிருக்குமிடத்து, அந்தக் கூடுதலான சேர்க்கை குறுக்குக் கோடாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும், அந்தக் காசோலையானது, சிறப்பு வகையில் குறுக்குக் கோடிடப்பட்டதாகவும், அந்த வங்கியருக்குக் குறுக்குக் கோடிடப்பட்டதாகவும் கொள்ளப்படுதல் வேண்டும்.

வழங்கப்பட்ட பின்பு, குறுக்குக் கோடிடுதல்.

*125.* ஒரு காசோலையானது, குறுக்குக் கோடிடப்படாதிருக்கிறவிடத்து, அதைக் கைக்கொண்டிருப்பவர் அதனைப் பொது வகையில் அல்லது சிறப்பு வகையில் குறுக்குக் கோடிட்டுக் கொள்ளலாம்.

ஒரு காசோலையானது, பொது வகையில் குறுக்குக் கோடிடப்பட்டிருக்கிறவிடத்து, அதைக் கைக்கொண்டிருப்பவர் அதனைச் சிறப்பு வகையில் குறுக்குக் கோடிட்டுக் கொள்ளலாம்.

ஒரு காசோலையானது, பொதுவகையில் அல்லது சிறப்பு வகையில் குறுக்குக் கோடிடப்பட்டிருக்கிறவிடத்து, அதைக் கைக்கொண்டிருப்பவர், "மாற்றத்தக்கதன்று" என்ற சொற்களைச் சேர்த்துக்கொள்ளலாம்.

ஒரு காசோலையானது, சிறப்பு வகையில் குறுக்குக் கோடிடப்பட்டிருக்கிறவிடத்து, எந்த வங்கியருக்கு அது குறுக்குக் கோடிடப்பட்டிருக்கிறதோ அந்த வங்கியர், தண்டல் செய்வதற்காகப் பிறிதொரு வங்கியருக்கு, தம்முடைய முகவருக்கு மீண்டும் சிறப்பு வகையில் குறுக்குக்கோடிட்டுக் கொள்ளலாம்.

*126.* ஒரு காசோலையானது, பொதுவகையில் குறுக்குக் கோடிடப்பட்டு இருக்கிறவிடத்து, எந்த வங்கியருக்கு வரையப்பட்டிருக்கிறதோ அந்த வங்கியர், ஒரு வங்கியரல்லாத பிற ஒருவருக்கு அதனைச் செலுத்துதல் ஆகாது.

பொதுவகையில் குறுக்குக் கோடிடப்பட்ட காசோலைக்கான செலுத்தம்.

ஒரு காசோலையானது, சிறப்பு வகையில் குறுக்குக் கோடிடப்பட்டிருக்கிறவிடத்து, எந்த வங்கியருக்கு அது வரையப்பட்டிருக்கிறதோ அந்த வங்கியர், அது எந்த வங்கியருக்குக் குறுக்குக் கோடிடப்பட்டிருக்கிறதோ அந்த வங்கியர் அல்லது தண்டல் செய்வதற்காகவுள்ள அவருடைய முகவரல்லாத பிற ஒருவருக்கு அதனைச் செலுத்துதல் ஆகாது.

சிறப்பு வகையில் குறுக்குக் கோடிடப்பட்ட காசோலைக்கான செலுத்தம்.

*127.* ஒரு காசோலையானது, சிறப்பு வகையில் ஒன்றுக்கு மேற்பட்ட வங்கியருக்குக் குறுக்குக் கோடிடப்பட்டிருக்கிறவிடத்து, தண்டல் செய்யும் நோக்கத்திற்காக ஒரு முகவருக்குக் குறுக்குக் கோடிடப்பட்டிருக்கிறபோது தவிர, எந்த வங்கியருக்கு அது வரையப்பட்டிருக்கிறதோ அந்த வங்கியர், அதற்கான செலுத்தத்தை மறுத்தல் வேண்டும்.

சிறப்பு வகையில் ஒரு முறைக்கு மேலாகக் குறுக்குக் கோடிடப்பட்டக் காசோலைக்கான செலுத்தம்.

*128.* எந்த வங்கியருக்கு, ஒரு குறுக்குக் கோடிடப்பட்ட காசோலையானது வரையப்பட்டிருக்கிறதோ அந்த வங்கியர் அதை முறைப்படியாகச் செலுத்தியிருக்குமிடத்து, அந்தக் காசோலைக்காகச் செலுத்துகிற வங்கியர் மற்றும் (அந்தக் காசோலையானது செலுத்தப்படுநரின் கையில் கிடைத்திருக்கும் நேர்வில்) அதன் வரைபவர், அந்தக் காசோலைக்குரிய தொகை அதன் உண்மையான சொந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டு மற்றும் அது அவரால் பெறப்பட்டிருக்குமாயின், அவர்கள் அனைத்துக் கூறுகளையும் பொறுத்து அவரவர்களுக்குரிய எந்த உரிமைகளைப் பெறுவதற்கும், எந்த நிலையில் வைக்கப்படுவதற்கும் உரிமை கொண்டவர்களாயிருப்பார்களோ, அதே உரிமைகளைப் பெறுவதற்கும், அதே நிலையில் வைக்கப்படுவதற்கும் உரிமை கொண்டவர்கள் ஆவர்.

குறுக்குக் கோடிடப்பட்டக் காசோலைக்கான முறைப்படியான செலுத்தம்.

*129.* பொதுவகையில் குறுக்குக் கோடிடப்பட்ட ஒரு காசோலைக்காக வங்கியர் அல்லாத ஒருவருக்குச் செலுத்துகிற அல்லது சிறப்பு வகையில் குறுக்கு கோடிடப்பட்ட ஒரு காசோலையானது தண்டல் செய்வதற்காக எவருக்கு அது குறுக்குக் கோடிடப்பட்டிருக்கிறதோ அந்த வங்கியர் அல்லது தண்டல் செய்வதற்காக அவருடைய வங்கியராக உள்ள முகவர் அல்லாத பிற ஒருவருக்குச் செலுத்துகிற வங்கியர் எவரும், அந்தக் காசோலையின் உண்மையான சொந்தக்காரருக்கு அந்தக் காசோலை அவ்வாறு செலுத்தப்பட்ட காரணத்தால் அவருக்கு நேரும் இழப்பு எதற்கும் கடப்பாடுடையவர் ஆவார்.

முறைப்படி அல்லாமல் குறுக்குக் கோடிடப் பட்டக் காசோலைக் கான செலுத்தம்.

*130.* பொது வகையில் அல்லது சிறப்பு வகையில் குறுக்குக் கோடிடப்பட்டிருக்கிறதும், இரண்டு நேர்வுகள் எதிலும், "மாற்றத்தக்கதன்று" என்ற சொற்களைக் கொண்டிருக்கிறதுமான ஒரு காசோலையைப் பெற்றிருக்கிற ஒரு நபர் எந்த நபரிடமிருந்து அவர் அதைப் பெற்றாரோ அந்த நபர், அந்தக் காசோலையின் உரிமை மூலத்தை விடச் சிறந்த உரிமை மூலத்தைப் பெற்றிருத்தல் ஆகாது; மற்றும், அதைவிடச் சிறந்த உரிமை மூலத்தை அளிப்பதற்குரிய திறனுடையவராகவும் இருத்தல் ஆகாது.

"மாற்றத்தக்க தன்று" என்னும் சொற்களைக் கொண்டிருக்கும் காசோலை.

*காசோலையின் செலுத்து கையைப் பெறுகிற வங்கியரின் கடப் பாடின்மை.*

*131.* எந்த வங்கியர், பொதுவகையில் அல்லது சிறப்பு வகையில் தமக்குக் குறுக்குக் கோடிடப்பட்டக் காசோலைக்கான செலுத்தத்தை ஒரு வாடிக்கையாளருக்காக நல்லெண்ணத்திலும் கவனக்குறைவின்றியும் பெறுகிறாரோ அந்தவங்கியர், அந்தக் காசோலையின் உரிமை மூலம் குறைபாடுடையதாக மெய்ப்பிக்கப்படுகிற நேர்வில், அத்தகைய செலுத்தத்தைப் பெற்றிருக்கிறார் என்ற காரணத்தினால் மட்டுமே அந்தக் காசோலையின் உண்மையான சொந்தக்காரருக்குரிய கடப்பாட்டை மேற்கொள்ளுதல் ஆகாது.

விளக்கம்.—ஒரு வங்கியர், குறுக்குக் கோடிடப்பட்ட ஒரு காசோலையின் செலுத்தத்தைப்பெறுவதற்கு முன்பு அவர், தம் வாடிக்கையாளரின் கணக்கில் காசோலைக்கான தொகையை வரவுவைக்கிறார் என்ற போதிலும், இந்தப்பிரிவின் பொருளின்படி அதற்கான செலுத்தத்தை ஒரு வாடிக்கையாளருக்காகப் பெறுபவர் ஆகிறார்.

*வரைவோலைகளுக்கு இந்த அத்தியாயம் பொருந்துதல்.*

*131(அ)* இந்த அத்தியாயத்தின் வகையங்கள், பிரிவு 85(அ) இல் பொருள் வரையறை செய்யப்பட்டவாறான வரைவோலை எதற்கும், அது ஒரு காசோலையாக இருந்தாற்போன்றே பொருந்துதல் வேண்டும்.

## அத்தியாயம் XV

## தொகுதிகளாகவுள்ள மாற்றுச்சீட்டுகள் பற்றியது

*மாற்றுச் சீட்டுகளின் தொகுதி.*

*132.* மாற்றுச்சீட்டுகள், பல பகுதிகளாக வரையப்படலாம், ஒவ்வொரு பகுதியும் எண்ணிடப்பட்டும், பிறபகுதிகள் செலுத்தப்படாதிருக்கும் வரையில் மட்டுமே, அது தொடர்ந்து செலுத்தத்தக்கதாகும் என்ற வகைமுறையைக் கொண்டும் இருக்கலாம். பகுதிகள் அனைத்தும் சேர்ந்து ஒரே தொகுதியாகும்; ஆனால், முழுத் தொகுதியும் ஒரே ஒரு மாற்றுச்சீட்டாக அமைகின்றது, மற்றும் அந்தப் பகுதிகளில் ஒன்று, அது தனிப்பட்ட மாற்றுச்சீட்டாக இருக்குமாயின், அது மாய்ந்து போகும் போது அந்தத் தொகுதி மாய்ந்து போகிறது.

***விலக்கு.***—ஒரு நபர், வெவ்வேறு நபர்கள் சார்பாக மாற்றுச்சீட்டின் வெவ்வேறு பகுதிகளை ஏற்கும்போது அல்லது அவற்றில் மேற்குறிப்பெழுதும்போது, அவரும் ஒவ்வொரு பகுதியின் பிந்திய மேற்குறிப்பெழுதுநர்களும், அத்தகைய ஒவ்வொரு பகுதியின்மேல், அது தனிப்பட்ட மாற்றுச்சீட்டாக இருந்தாற்போன்றே கடப்பாடுடையவர்கள் ஆவார்.

*முதலில் ஒரு பகுதியைப் பெற்றுள்ள கைக்கொண் டிருப்பவரே அனைத்திற்கும் உரிமை கொண்டவர் ஆவார்.*

*133.* ஒரே தொகுதியில் வெவ்வேறு பகுதிகளையும் முறைப்படி கைக்கொண்டிருப்பவர்களிடையே எவரொருவர் தம்முடைய பகுதிக்கு உரிமை மூலத்தை முதலில் பெற்றுள்ளாரோ அவரே பிற பகுதிகளுக்கும் அந்த மாற்றுச்சீட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் பணத்திற்கும் உரிமை கொண்டவர் ஆவார்.

## அத்தியாயம் XVI

## பன்னாட்டுச் சட்டம் பற்றியது

*அயல்நாட்டு முறை யாவணத்தை எழுதுநர், ஏற்குநர் அல்லது மேற்குறிப் பெழுதுநரின் கடப்பாட்டினை ஆளுகிற சட்டம்.*

*134.* மாறான ஓர் ஒப்பந்தம் இல்லாதிருக்கையில், ஓர் அயல்நாட்டுக் கடனுறுதிச்சீட்டை, மாற்றுச்சீட்டை அல்லது காசோலையை எழுதுநர் அல்லது வரைபவரின் கடப்பாடு, முக்கிய பொருட்பாடுகள் அனைத்திலும், முறையாவணத்தை அவர் எந்த இடத்தில் எழுதினாரோ அந்த இடத்தின் சட்டத்தின் வாயிலாகவும், ஏற்குநர் மற்றும் மேற்குறிப்பெழுதுநர் அவரவர்களுக்குரிய கடப்பாடுகள் அந்த முறையாவணம் எந்த இடத்தில் செலுத்தத்தக்கது என்று கருதப்பட்டிருக்கிறதோ அந்த இடத்தின் சட்டத்தின் வாயிலாகவும் முறைப்படுத்தப்படும்.

**எடுத்துக்காட்டு**

ஒரு மாற்றுச்சீட்டானது, வட்டி வீதம் 25 விழுக்காடாக இருக்கிற கலிபோர்னியாவில் 'அ' என்பவரால் எழுதப்பட்டு, வட்டி வீதம் 6 விழுக்காடு இருக்கிற வாஷிங்டனில் செலுத்தத்தக்கதென 'ஆ' என்பவரால் ஏற்கப்பட்டது அந்த மாற்றுச் சீட்டானது இந்தியாவில் மேற்குறிப்பெழுதப்பட்டு, மதிப்பு மறுக்கப்படுகிறது. இந்தியாவில், அந்த மாற்றுச்சீட்டின்மேல், 'ஆ' வுக்கு எதிராக ஒருவழக்குத் தொடரப்படுகிறது. அவர் 6 விழுக்காடு வீதத்தில் மட்டுமே வட்டி செலுத்துவதற்குக் கடப்பாடுடையவர் ஆவார். ஆனால், 'அ'-மீது வரைபவர் என்ற முறையில் பொறுப்புச் சுமத்தப்படுமாயின், அவர் 25 விழுக்காடு வீதத்தில் வட்டி செலுத்துவதற்குக் கடப்பாடுடையவர் ஆவார்.

*மதிப்பு மறுக்கப்படுதல் செலுத்துகை இடத்தின் சட்டத்தினால் ஆளப்படும்.*

*135.* ஒரு கடனுறுதிச் சீட்டு, மாற்றுச் சீட்டு அல்லது காசோலையானது அது எங்கு எழுதப்படுகிறதோ அல்லது மேற்குறிப்பெழுதப்படுகிறதோ அந்த இடமல்லாத பிறிதோர் இடத்தில் செலுத்தத்தக்கதாக இருக்கிறவிடத்து, மதிப்பு மறுக்கப்படுவதாக அமைவது எது என்பதும், மற்றும் மதிப்பு மறுக்கப்பட்டது பற்றிய எந்த அறிவிப்பு போதுமானதாகும் என்பதும் அது எங்குச் செலுத்தத்தக்கதாக இருக்கிறதோ அந்த இடத்தின் சட்டத்தின் வாயிலாகத் தீர்மானிக்கப்படும்.

**எடுத்துக்காட்டு**

இந்தியாவில் வரையப்பட்டு, மற்றும் மேற்குறிப்பெழுதப்பட்டு உள்ளதும், ஆனால் பிரான்சில் செலுத்தத்தக்கதாக ஏற்கப்பட்டதுமான ஒரு மாற்றுச்சீட்டானது மதிப்பு மறுக்கப்படுகிறது. அத்தகைய மதிப்பு மறுப்புக்காக மேற்குறிப்பெழுதுநர் ஒரு மதிப்புக் குறிப்பை எழுதும்படி செய்விக்கிறார்; மேலும், அயல்நாட்டு மாற்றுச் சீட்டில்லாதவை பொறுத்து இதில் அடங்கியுள்ள விதிகளுக்கு இணங்க இல்லை என்ற போதிலும், அந்த மதிப்பு மறுப்பு பற்றிய அறிவிப்பைப் பிரான்சு நாட்டுச் சட்டத்திற்கிணங்கக் கொடுக்கிறார்; அந்த அறிவிப்பே போதுமானதாகும்.

*இந்தியாவிற்கு வெளியே, ஆனால் இந்தியச் சட்டத்திற் கிணங்க எழுதப்பட்ட முறையாவணம், முதலியன.*

*136.* ஒருமாற்று முறையாவணம், இந்தியாவுக்கு வெளியே, ஆனால், இந்தியச் சட்டத்திற்கிணங்க, எழுதப்படுகிறது. வரையப்படுகிறது அல்லது மேற்குறிப்பெழுதப்படுகிறது எனில், அத்தகைய முறையாவணத்தின் வாயிலாகச் சான்றாகிற உடன்பாடு எதுவும் எந்த நாட்டில் செய்யப்பட்டதோ அந்த நாட்டின் சட்டத்திற்கிணங்கச் செல்லா நிலையது ஆகும் என்ற சூழ்நிலையானது, இந்தியாவிற்குள் செய்யப்பட்ட பிந்திய ஏற்பு எதையும் அல்லது அதன்மேல் எழுதப்பட்ட பிந்திய மேற்குறிப்பு எதையும் செல்லாநிலையது ஆக்காது.

*அயல்நாட்டுச் சட்டம் குறித்த துணிபு.*

*137.* கடனுறுதிச்சீட்டுகள், மாற்றுச்சீட்டுகள் மற்றும் காசோலைகள் தொடர்பான அயல்நாட்டுச் சட்டம் எதுவும், மாறானது மெய்ப்பிக்கப்பட்டாலன்றியும், மெய்ப்பிக்கப்படும் வரையிலும் இந்தியாவின் சட்டத்தைப் போன்றிருப்பதாகத் துணிபு கொள்ளப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் XVII

## சான்றுறுதி அதிகாரிகள்

[*138 மற்றும் 139, சான்றுறுதி அதிகாரிகள் சட்டம், 1952 இன் (LIII/1952) பிரிவு 16 இனால் நீக்கறவு செய்யப்பட்டது.*]

## இணைப்புப்பட்டியல்

## செய்சட்டங்கள் நீக்கறவு செய்யப்பட்டன

[*திருத்தம் செய்தல் சட்டம், 1881 இன் (XII/1881) பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் I இன் பகுதி I இனால் நீக்கறவு செய்யப்பட்டது.*]